# கொழும்பு நோக்கிவந்த சரக்குக் கப்பல் கடலில்

Registered as a News Paper in Ceylon   விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 174
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்   ஆடி 19   ஜமா. அவ் 30   செவ்வாய்க்கிழமை   [4-8-70]

அன்டன்
வாளிகள்
அளவுகள் 7'' முதல் 14''வரை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

போன்: 7199
தங்க வைர
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# கவிழ்ந்தது

## அதிலிருந்த 16 பேரும் மூழ்கி மரணம்?

சென்னை, ஆக. 3

தூத்துக்குடியிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட சரக்குக் கப்பல் கடலில் மூழ்கியிருக்கவேண்டுமென்றும், இதில் பிரயாணம் செய்த 16 பேரும் கடலுக்குப் பலியாகியிருக்கவேண்டும் என்றும் இப்பொழுது அஞ்சப்படுகிறது.

கடந்த 21-ந் திகதி தூத்துக்குடியிலிருந்து வெங்காயம் ஏற்றிக்கொண்டு இந்தப் பாய்மரக் கப்பல் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது ஆனல் கப்பல் உரிய காலத்தில் கொழும்புக்குப் போய்ச் சேராததால் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கப்பல் தனுஷ்கோடியருகே மூழ்கியிருக்கவேண்டும் என்பதற்கு இப்பொழுது ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தனுஷ்கோடி அருகே வெங்காய மூடைகள் ஒதுங்கியுள்ளன. தனுஷ்கோடிக்கும் மண்டபத்துக்குமிடையில் ஒரே வெங்காயமாக மிதக்கின்றது. இந்தக் கப்பலைச் செலுத்துவதற்காக உபயோகிக்கப்பட்ட துடுப்புகளும் ஒதுங்கியுள்ளன இந்தக் கப்பலில் ஆபத்துக் காலத்தில் தப்புவதற்காக இருந்த சிறிய படகு மண்டபத்துக்கு அருகிலுள்ள ராமன்திட்டு என்ற சிறிய தீவில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தடயங்களைக் கொண்டு கப்பலில் சென்ற அனைவரும் மூழ்கி மரணமாகியிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது. இவர்களின் சடலங்களைக் கண்டுபிடிப்பதில் இப்பொழுது முயற்சி எடுக்கப்படுகின்றது. இந்த முயற்சியில் சுங்க இலாகாப் படகுகளும், விமானங்களும் ஈடுபட்டுள்ளன.

# புதிய அரசியலமைப்பில் தமிழர் உரிமைகளுக்குப் பாதுகாப்பு

## நடவடிக்கை எடுக்க ஜி. ஜி. கொழும்பில் கூட்டும் மாநாடு

கொழும்பு, திங்கள்

இலங்கையைக் குடியரசாக்கும் பொருட்டு உருவாக்கவிருக்கும் புதிய அரசியல் அமைப்பில் தமிழ் மக்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்கான அம்சங்களைச் சேர்ப்பதுபற்றியும் அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதற்காக தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாணப் பிரதிநிதியுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இம்மாதம் ஒன்பதாம் திகதி மாலை கொழும்பு செஞ்சிலுவைச் சங்கமண்டபத்தில் ஒருமாநாடு கூட்டுகிறார்.

கல்விமான்கள், அரசியல் வாதிகள், டாக்டர்கள், என்ஜினியர்கள், வழக்கறிஞர்கள் என வாழ்க்கையில் பலதுறைப் பட்டோருக்கும் இந்த மகாநாட்டுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது



வக்கூட்டடத்துக்கு முதல் நாள் வெள்ளவத்தை [illegible] மங்கையர் சபையில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் புதிய அரசியல் அமைப்புபற்றியும் அரசியல் நிர்ணய சபை அமைப்பு பற்[illegible]ம்

## 40 வயதானவர்களை இடமாற்றம் செய்யக்கூடாது

### ஆசிரியர் சங்கம் கோரிக்கை

உடும்பராய், திங்கள்

''இளைப்பாறும் வயதை அரசாங்கம் 55 வயது என்று கொண்டுவருவதால் வெளி மாவட்டங்களுக்கு மாற்றப்படும் ஆசிரியர்கள் விஷயத்திலும் சலுகை கொடுத்து 45 வயது என்பதை 40 வயது என்று கொண்டுவரவேண்டும் ஓர் ஆசிரியர் 40 வயது தொடங்கி 55 வயது வரை 15 ஆண்டுகளேனும் சொந்த மவட்டத்தில் கடமையாற்ற வசதி இருத்தல் வேண்டும். ஆகவே 40 வயதுக்கு மேற்பட்டோரை வெளி மாகாணங்களுக்கு மாற்றுவது நியாயமில்லை.''

வலி-வடக்குத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. வே. சின்னையா, ஆசிரியர் இடமாற்றம் பற்றிச் சமர்ப் [illegible] கூறியுள்ளதாவது:

''நல்ல அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களே, நமது நாட்டின் கல்வி மந்திரியாகவும், உதவி மந்திரியாகவும் இப்பொழுது பெரும் தொண்டு புரிகிறார்கள். ஆசிரியர்களுக்குரிய கஷ்டங்களை அவர்கள் நன்கு உணருவார்கள்; நல்லன செய்வார்கள் என்பது ஆசிரிய சமுதாயத்தின் திடமான நம்பிக்கை. ஆசிரியர் இடமாற்றம், ஆசிரியர்கள் ஒய்வுபெறுதல், சம வேலைக்குச் சம சம்பளம் முதலிய பல்வேறு பிரச்னைகளிலும் ஒரு சுமுகமான வழியை வித்தியாகுதி கடைப்பிடிக்கும் என்றே நம்புகிறோம்

ஆசிரியர்களது உரிமைகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் வழங்க முன்வந்திருப்

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, செவ்வாய்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபைசுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

முதல் பரிசு:
27 C 0921 ரூ 92,020

2ம் பரிசு:
03 G 0828 ரூ. 36,808

3ம் பரிசு:
02 V 0291 ரூ. 9,202

தலா 460 ரூபா 10 சதம் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 26 V 0838 | 34 L 0915 |
| 06 J 0806 | 15 F 0310 |
| 25 G 0950 | 17 D 0995 |
| 28 0310 | 29 V 0549 |
| 13 P 0830 | 24 Z 0669 |
| 32 O 0987 | 08 Q 0717 |
| 09 G 0944 | 09 O 0310 |
| 25 N 0930 | 10 Y 0679 |
| 22 O 0165 | 10 E 0083 |
| 37 S 0883 | 16 U 0075 |
| 01 Q 0767 | 35 R 0069 |
| 19 S 0967 | 20 E 0949 |

ஐயா கொலைவழக்கு:

## 'எனது தந்தை பெரிய தமிழரசு ஆதரவாளர்'

### இறந்தவர் மகன் சாட்சியம்

மட்டுவில், திங்கள்

'எனது தந்தை யாருக்கும் கரைச்சல் கொடுப்பவர் அல்ல. அவர் ஒரு பெரிய தமிழரசுக்கட்சி ஆதரவாளர் என்பது உண்மைதான் ஆனல் அதையிட்டு அவருக்கு பகைவர்கள் இருப்பது பற்றியோ, எனது தந்தை இ. போ. ச. மனேச்சருக்கு அடித்ததையோ, தந்தை வேலைநீக்கம் செய்யப்பட்டதைப்பற்றியோ மந்திரிதிருச் செல்வத்தின் செல்வாக்கை பயன்படுத்தி திரும்ப வேலை

சாரதியான ஐயா என்றழைக்கப்படும், சின்னப்பொடி வேலு கொலைவழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் மகன் வேலு குணரத்தினம் மேற்கண்டவாறு, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் கூறினார்.

விசாரணையின் போது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. சி. பொ. மயில்வாகனம், திரு. எஸ். அம்பலவாணர் ஆகியோரின் அனுசரணையுடன், அட்வகேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி மாகாணங்களுக்கு மாற்றுவது நியாயமில்லை.''

வலி-வடக்குத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. வே. சின்னையா, ஆசிரியர் இடமாற்றம் பற்றிச் சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார்

திரு. சின்னையா மேலும் வழியை வித்தியாவகுதி கடைப்பிடிக்கும் என்றே நம்புகிறோம்

ஆசிரியர்களது உரிமைகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் வழங்க முன்வந்திருப்பது மிகவும் பாராட்டக் கூடியதாகும்.''

என்ஜினியர்கள், வழக்கறிஞர்கள் என வாழ்க்கையில் பலது றைப் பட்டோருக்கும் இந்த மகாநாட்டுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது

அரசியல் நிர்ணயசபையின் அங்குரார்ப்பண வைப

# தேர்தல் ஆட்சேப வழக்குகள்: யாழ்ப்பாணத்தில் விசாரணை

யாழ்ப்பாணம், செவ். வடபகுதி தேர்தல் ஆட்சேப வழக்குகளின் விசாரணைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

வடபகுதி அசைஸ் விசாரணைகள் முடிவடைந்ததும் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகுமென்றும், அசைஸ் விசாரணைகள் முடிவடையாத பட்சத்தில் வேறொரு மண்டபத்தில் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணைகள் நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத் தொகுதி, வட்டுக்கோட்டைத்தொகுதி பருத்தித்துறைத் தொகுதி தேர்தல் ஆட்சேப வழக்குகள் விசாரணைசெய்யப்படுமென்று தெரியவருகிறது

மாங்குளம் முக்கொலை வழக்கு

# 'வாடியில் கோடரியையும் கத்திகளையும் கண்டெடுத்தேன்'

— இன்ஸ்பெக்டர்

யாழ்ப்பாணம், செவ். ''வாடியில் கோடரியையும், காட்டுக்கத்தியையும் கண்டெடுத்தேன் அங்கு மற்றும் இரு காட்டுக்கத்தியும் காணப்பட்டது. கோடரியிலும் கத்தியிலும் இரத்தக் கறை காணப்பட்டது. சேட் ஒன்று நிலத்தில் கிடந்தது அச்சேட்டு பாக்கட்டுகள் வெளியில் இழுத்துவிடப்பட்ட நிலையிலிருந்தன''

மாங்குளம் முக்கொலை வழக்கில் இன்ஸ்பெக்டர் இராமநாதன் நேற்று சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் எட்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மாங்குளத்தில் 68 ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி வில்லியம் பியரத்தின ஆகிய இருவரும் செல்லத்துரை, சின்னையா பால்ராஜ் ஆகியோரைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இன்ஸ்பெக்டர் இராமநாதன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: அரிக்கன்லாந்தர் ஒன்றும் காணப்பட்டது. சாரமொன்றும் அங்கு கிடந்தது. வாடிக்கு வெளியில் அரைக்கால் சட்டை ஒன்று பாக்கட்டுகள் வெளியில விடப்பட்ட நிலையில் கிடந்தது வாடிக்குள் ஒரு கொப்பியையும் கண்டெடுத்தேன். அங்கு கவனித்தவற்றைக் குறிப்பெடுத்துக்கொண்டேன். அதன்பின் மாஜிஸ்திரேட் விசாரணை நடந்தது நான் சாட்சிகளை ஆஜர்செய்தேன் அதன்பின் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றேன்.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட போது இன்ஸ்பெக்டர் இராமநாதன் கூறியதாவது: எதிரிகளை முதல்தடவையாக ஜூலை மாதம் 11-ம் திகதி காலை நான் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோது பார்த்தேன். எதிரிகளுடன் நான் கதைத்தேன் எதிகளின் வாக்குமூலங்களை நான் பதிவுசெய்யவில்லை. எதிரிகள் கூறியவை பற்றி எவ்வித குறிப்பும் எடுக்கவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

## இன்று வண்ணை சிவன் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், புதன் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 9ந் திருவிழாவான தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது இன்று பகல் 11 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் பகல் 12 மணிக்கு ரதாரோகணமும் இரவு 7மணிமுதல் 8-30 மணிவரை செல்வி சரோஜினிதேவி வேதாரண்யத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

## பாரதம் கி. ஜெர்மனி புதிய உறவு

புதுடில்லி, ஆக 3 பாரதம் கிழக்கு ஜெர்மனியுடன் காவல் தூதுவர் நிலையில் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுமென்று வெளிவிவகார அமைச்சர் திரு சுவர்ணசிங் இன்று அறிவித்தார், இதுவரை காலமும் வர்த்தகப் பிரதிநித்துவ நிலையிலேயே இரு நாடுகளிடையேயும் உறவு இருந்து வந்தது.



...கையர் சபையில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ் ஜே வி செல்வநாயகம் புதிய அரசியல் அமைப்பு பற்றியும் அரசியல் நிர்ணய சபை அமைப்பு பற்றியும் ஆராய்வதற்கா ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தாரென்பதும் நேற்று முன்தினம் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் நிலைபற்றி ஆராய ஜனநாயகத் தொழிலாளர்காங்கிரஸ தலைவர் ஜனாப் ஏ அசீஸ் கொள்ளுப்பிட்டியில் ஒரு கருத்தரங்கை எற்பாடுசெய்திருந்தாரென்பதும் குறிப்பிடத்தக்கது

| | | |
|---|---|---|
| 25 N 0930 | | 10 Y 0679 |
| 22 O 0165 | | 10 E 0083 |
| 37 S 0883 | | 16 U 0075 |
| 01 Q 0767 | | 35 R 0069 |
| 19 S 0967 | | 20 E 0949 |
| 16 B 0063 | | 06 J 0510 |
| 35 M 0606 | | 38 C 0556 |
| 20 S 0911 | | 13 B 0915 |
| 16 N 0855 | | 23 A 0973 |
| 20 B 0002 | | 32 B 0230 |
| 16 R 0580 | | 16 V 0171 |
| 22 R 0382 | | 37 P 0077 |
| 15 B 0398 | | 37 S 0600 |
| 10 H 0335 | | 03 X 0145 |
| 27 H 0079 | | 16 R 0148 |
| 05 H 0664 | | 31 L 0356 |
| 18 F 0037 | | 20 W 0604 |

...அடித்ததையோ, தந்தை வேலைநீக்கம் செய்யப்பட்டதைப்பற்றியோ மந்திரிதிருச் செல்வத்தின் செல்வாக்கை பயன்படுத்தி திரும்ப வேலையில் சேர்ந்து கொண்டதுபற்றியோ எனக்கு எதுவுமே தெரியாது.'

கொடிகாமம் இ.போ.ச

| | |
|---|---|
| 23 X 0480 | 30 A 0533 |
| 35 0565 | 22 E 0483 |
| 32 H 0538 | 22 Q 0225 |
| 67 B 0018 | 01 D 0864 |
| 26 W 0528 | 35 D 0133 |
| 04 D 0312 | 01 T 0704 |
| 19 Y 0650 | 24 K 0411 |
| 09 Q 0572 | 34 K 0059 |
| 08 F 0875 | 09 L 0905 |
| 31 L ·460 | 03 T 0201 |
| 36 C 0811 | 24 D 0198 |
| 07 X 0713 | 30 R 0976 |
| 24 A 0595 | 18 Z 0275 |
| 11 N 0997 | 19 H 0906 |
| 05 B 0846 | 22 T 0410 |
| 05 E 0118 | 35 U 0843 |
| 07 G 0023 | 23 P 0263 |
| 13 C 0985 | 15 R 0128 |
| 13 P 0621 | 25 U 0922 |
| 07 O 0635 | 12 D 0180 |
| 10 H 0019 | 06 J 0814 |
| 27 T 0504 | 07 D 0979 |
| 11 X 0207 | 04 N 0424 |
| 14 A 0742 | 03 L 0557 |
| 29 X 0230 | 24 U 0348 |
| 04 H 0353 | 26 N 0996 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

...விசாரணையின் போது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. சி. பொ. மயில்வாகனம், திரு. எஸ். அம்பலவாணர் ஆகியோரின் அனுசரணையுடன், அட்வக்கேட் திரு ஜே எஸ். செரியிம், திரு ஈ. ஆர் தம்பிரத்தினம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்

இந்தவழக்கில் அச்சுவேலியைச் சேர்ந்த தம்பித்முத்து கணேசமூர்த்தி தம்பிமுத்து நவரத்தினம், மஸ்கேலியாவைச் சேர்ந்த பெருமானர் இராமலிங்கம் ஆகியோர் மீது இதற்கென நியமிக்கப்பட்ட விசேஷ பொலிஸ் குழுவினரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராஜா இந்தவழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார் விசாரணையின் போது முதன் முதலில் வழக்கறிஞர் திரு. திரு சி. பொ. மயில்வாகனம் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. செரியிம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தார பொலிஸ் தரப்பில் சாவகச்சரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு நடராசா கதிர்காமநாதன் வழக்கை டத்தினர். அட்வக்கேட் திரு செரியிம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

தொடர்ந்துவிசாணை நடைபெற்றது.

# புதிய அரசியல் திருத்தசட்ட மூலம் நிறைவேறியது!

கொழும்பு, திங்கள் புதிய அரசியல்அமைப்பு திருத்த சட்டமூலம் இன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேறியது தமிழரசுகட்சியினர் இவ்வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் ஆதரித்து வாக்களித்தனர். யு. என். பி யினர் சபைக்கு சமூகமளிக்கவில்லை. நூற்றிப்பதினேழு பேர் ஆதரவாகவாககளித்தனர், எவரும் எதிர்த்து வாக்களிககவில்லை.

கைலஞ்சம், ராஜதுரோகம், பொய்ச்சாட்சிபோன்ற குற்றச் சாட்டுக்கள்தவிர்ந்த ஏனைய குற்றங்களின் மீது தண்டனை பெறுபவர்கள ஆட்சிமன்ற பிரதிநிதியாக இருக்கமுடியாது என்ற விதியை தடுப்பதாக இந்தத் திருத்தம் அமைகிறது.

ஒருவன் சிறையிலிருப்பது குற்றமல்ல; அவன் எந்தக் காரணத்துக்காக சிறை சென்முன் என்பதுதான்முக்கியம், ஆகையால் சிறை சென்றவர்கள், தண்டனை பெற்றவர்கள் பிரதிநிதியாக இருக்க முடியாது என்பது தவருன விதியாகும் என்று அரசியலமைப்பு அலுவல் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா சபையில் பேசுகையில் தெரிவித்தார்

# 'புதிய திருத்தத்தின் அவசரமென்ன?'

—வி என்.

கொழும்பு திங்கள் 'புதிய அரசியல் திருத்த சட்டமூலத்தை அவசரமாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியமென்ன? இந்தச் சட்டமூலம் தேர்தலுக்கு முன்னதாகக் கொண்டுவரப்பட்டிருந்தால் பரவாயில்லை. இப்போது நிறைவேற்றப்படும் திருத்தம் எப்போதிலிருந்து செல்லுபடியாகும் என்பதுதான் முக்கியமாக கவனிக்கவேண்டிய பிரச்னை நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்துதான் செல்லுபடியாகுமென்ருல் அதனைவரவேற்கலாம்'

இவ்வாறு சாவகச்சேரி ஆட்சிமன்றஉறுப்பினர் திரு வி என் நவரத்தினம் இன்று ஆட்சிமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நல்லூர் எம் பி திரு அருளம்பலம் பேசுகையில் தாம் இந்தச் சட்டத்தை ஆதரிப்பதாகக் கூறினர். திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவும் பேசினர்.

— —

## நல்லூர் உற்சவம்: மேலும் 10பஸ்கள்

நல்லூர், திங்கள் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு 10 பஸ்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரவிருக்கின்றன. திருவிழா முடிவடைந்ததும் இவை திருப்பிஅனுப்பப்படும்.

சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, காரைநகர் சேவைகளில் இந்த பஸ்கள் ஈடுபடுத்தப் படும் என இ. போ. ச. அதிகாரி ஒருவர் கூறினர்,

கம்பஹாநீதிமன்றத்தில்

## சிங்கள விசாரணை ஆரம்பம்

கொழும்பு, திங்கள் கம்பஹாவிலுள்ள ஐந்து நீதிமன்றங்களிலும் இன்று சிங்களத்தில் விசாரணை ஆரம்பமானது சகல பதிவுகளும் தஸ்தாவேசுகளும் இந்த நீதிமன்றங்களில் இனிமேல் சிங்களத்தில் வழங்கப்படும்.

கம்பஹா சிங்கள மக்கள் வாழும் பிரதேசமானதால் இங்கு முதன் முதலாக சிங்களத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென இவ்வைபவத்தில் கலந்து கொண்ட நீதி அமைச்சர் ஜே. எம் ஜெயமன்ன கூறினர். 157 ஆண்டுகளாக ஆங்கில மொழியில் நீதிமன்றங்களில் விசாரணைகள் நடைபெற்றுவந்ததும், முதல் தடவையாக சிங்களத்திலே விசாரணை இங்கு நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது,

தொழில் அமைச்சர் திரு எம் டி சற் சிறிவர்த்தனவும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்,

நீதி அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி திரு ரட்ண சிறி விஜயதிலக்கா இவ்

(4-ம் பக்கம் பார்க்க)

# ·யூ. என் பி யிலிருந்து டாக்டர் தஹா ராஜினுமா!

கோட்டை, திங்கள் தேசிய அரசாங்கத்தில் உள்துறை அமைச்சராகவிருந்த டபிள்யூ. தஹநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ராஜினுமாச் செய்தார்:

தாம் சுயேச்சை அங்கத்தவனுக இயங்கப் போவதாகவும் அவர் இன்று அறிவித்தார்

இவர் கடந்த சில காலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமான தொனியில் பேசியும் அறிக்கைகள் விடுத்தும் வந்ததை யொட்டி இவர்மீது ஐக்கிய தேசியக் கட்சி மத்திய கமிட்டி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருந்தது.

ஆரம்ப காலத்தில் டாக்டர் தஹா லங்கா சமசமாஜக் கட்சியில் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்து கட்சியின் வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்தார். பின்னர் அங்கிருந்து வெளியேறி மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்தார், பின்னர் லங்கா பிரஜா தந்திர வாத கட்சியை ஆரம்பித்தார், பண்டாரநாயக்கா காலமான போது, இவர் காபாந்து அரசின் பிரதமராகவும் இருந்தார், கடந்த அரசாங்கத்தில் இணைந்து கடந்த பொதுத் தேர்தலில் தனது கட்சியைக் கலைத்துவிட்டு, யு என் பியுடன் இணைந்து அக்கட்சி டிக்கட்டில் போட்டியிட்டு வெற்றி பெற்ருர்.

சபையில் விளக்கம்

'இன்று நடந்த யு என் பி பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டேன், புதிய அரசியல் திருத்த சட்ட மூலத்தை எதிர்பதாகத் தீர்மானித்தார்கள், இதனை எதிர்த்து நான் யு என் பியிலிருந்து பகல் 12-40-க்கு ராஜினுமாச் செய்தேன்'

இவ்வாறு காலி எம் பி டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா ஆட்சிமன்றத்தில் இன்று மாலை பேசுகையில் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


**விற்பனைக்கு**

கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 2 1/2 மணியின் பின் தொடர்புகொள்க. பிறஸ் போட் நீர் இறைக்கும் யந்திரம், சிந்து இனப் பசுக்கள் சு. அருளம்பலம், சித்தி விநாயகர் கோவில் வடக்கு வீதி, அரியாலை, யாழ்நகர் 3033

உரும்பராய் கிழக்கில் ப. நாகலிங்கம் அவர்களுக்குச் சொந்தமான 8 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: அ. சுப்பிரமணியம் புரக்டர், உரும்பிராய். 2176


## கேள்வி விளம்பரம்


எழுவைதீவுக்கிராம சபைத் தலைவரால் ஆகஸ்ற் மாதம்15-ந் திகதி(15-8-70) காலை 11-00 மணி வரை கடற்கரை வீதி, சவக்காலை வீதி ஆகிய வீதி வேலைகளுக்குச் சீல்வைத்த கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள், பத்திரப்பணமாக ரூபா 10/-ம் கேள்விப்பிணைப் பணமாக ரூபா 100/-ம் செலுத்தியதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். மற்றைய விபரங்களை கி.ச. அலுவலகத்திலும் உ.ஆ. உ. ஆணையாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்) வி. சிவசம்பு
தலைவர்.

கிராமசபை அலுவலகம்,
எழுவைதீவு,
31-7-70 2390

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி,
போயா, பிரிபோயா 2-30
ஜெய்சங்கர்- விஜயநிர்மலா
நடித்த
**சிரித்த முகம்**

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த
**இரு கோடுகள்**

**வெஸ்லி சினிமா** மானிப்பாய்
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி
சத்தியன், ஷீலா, மது நடித்த
**செம்மீன்**
(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
என், எஸ். கிருஷ்ணன்
ரி. ஏ. மதுரம் - டெய்ஸி ராணி
நடித்த
**67-ல் என்.எஸ். கிருஷ்ணன்**
(எஸ், ரீ ஆர். பிலிம்ஸ்)
அமரர் அண்ணா, தமிழக முதலமைச்சர் மு கருணாநிதி, திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.
பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி


## சின்னமடு செபமாலை மாதா திருநாள்

யாழ்ப்பாணம், செவ்வாய் சரவணை சின்னமடு "செபமாலை" மாதா தேவாலய வருடாந்த உற்சவம் நாளைக் காலை 'மாதா' தரிசனத்துடன் முடிவடைகிறது.

இன்று மாலை ஆறுமணிக்கு உபதேசிமாரின் செபமாலைத் தியானத்தை அடுத்து இரவு 7 மணிக்கு குருமாரின் திருமணித்தியால ஆராதனை நடைபெறும். இரவு 8 மணிக்கு மேற்றிராணியாரின் நற்கருணைப்பவனி ஆரம்பமாகும்.

நாளைக் காலை 8 மணிக்கு யாழ் மேற்றிராசன துணை ஆயர் மகா வந். எல். ஆர். அன்ரனி திருநாட்பூசை ஒப்புக்கொடுப்பார். அதையடுத்து மாதா தரிசனமும் திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெற்று திருநாள் முடிவடையும்.

சின்னமடுத் திருப்பதிக்கு இன்றும் நாளையும் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, இறுப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து இ. போ. சபையினர் விசேட பஸ் சேவை நடத்துகின்றனர்.

ஆசிரியர்கள் நடத்தும்

## தனிப்பட்ட வகுப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்

கொழும்பு, திங்கள்

அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை முடிந்த பின் தனிப்பட்ட முறையில் வீடுகளில் நடத்திவந்த வகுப்புகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படவிருக்கிறது.

கல்வி அமைச்சர் ஜனாப் பதியூதீன் முகமத் பாடசாலை முடிந்த பின்னர் ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் நடாத்தும் வகுப்புகளை நிறுத்த முடிவு செய்துள்ளார். இவ்வகுப்புகளை நடத்துவதன் மூலம் ஆசிரியர்கள் தங்கள் ஒழுங்கான கடமையிலிருந்து தவறிவிடுகிறார்களாம்.

இதுசம்பந்தமாக பல முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும், சில ஆசிரியர்கள் வகுப்பில் அக்கறை எடுக்காமல், பாடசாலை முடிந்தபின் நடாத்தும் தனிப்பட்டவகுப்புகளில் அக்கறைகாட்டுவதாகவும்தனிப்பட்டவகுப்பிற்கு வரவழைப்பதே இதன் நோக்கமாகுமென்றும் கல்விமந்திரி தெரிவித்தார்

வசதியுள்ள பெற்றோர்கள் பணம்கொடுத்து தனிப்பட்ட வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்பிவருகின்றனர். ஏழை மாணவர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்கு செல்ல முடியாமல் கஷ்டப்படுவதோடு, பரீட்சைகளிலும், சித்திபெறத் தவறிவிடுகின்றனர்

புதிய சோஷலிச கட்சிதிட்டத்தின்படி, சகல மாணவர்களும், ஒரேவிதமான கல்வியைப் பெற வசதியளிக்கப்படுமென்றும் எவ்விதபாகுபாடும்காட்ட இடம்கொடுக்கப்படாதென்றும் கல்வி மந்திரி கூறினார்,

## 'சோஷலிசப்பாதையில்தான் தமிழருக்குவிமோசனம்'

உடுவில். திங்கள்

"தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இந்நாட்டின் இரு பெரும் சகோதர இனங்கள். சகோதரங்களிடையே கருத்து வேற்றுமைகளும் பகைமை யுணர்ச்சிகளும் இருப்பின் நாடு ஒருபோதும் முன்னேறப் போவதில்லை. இரு இனமும் பிரச்னைகளை ஒற்றுமையுடன் அணுகி ஒரு நெறிப்பட்டு தீர்த்துக்கொள்வதன் மூலம் தான் பிரச்சனைகளுக்கு முடிவு காணலாம். சமஷ்டி அமைப்பின் மூலம் எமது நாட்டு பிரச்சனைகளை ஒருபோதும் தீர்த்துக் கொள்ள முடியாது. இறப் [illegible]

## விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, திங்.

வல்வெட்டித்துறை திருவில் வருடாந்தவிளையாட்டுப்போட்டியும் 25-வது ஆண்டுவிழாவும் இம்மாதம் 8-ந் திகதி இரவு மின்னொளியில் திருவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவுக்குப் [illegible] விருந்தினராக [illegible] புர[illegible] எம். பியும் ஆட்சி [illegible]

## "பெரும்பான்மைமக்களின் தீர்ப்பை சிறுபான்மையினர் ஏற்றோம்"

### முன்னாள் உபசபாநாயகர் விளக்கம்

உடுப்பிட்டி-புலோலி, திங்கள்

'இலங்கை சுதந்திரமடைந்து 22 ஆண்டுகளின் பின் இலங்கையில் புதிய அரசியல் சாசனம் உருவாகப்போகின்றது. கூட்டணி அரசாங்கத்தின் புதிய அரசியல்சாசனம் சரியா, பிழையா வென ஒரு நிமிடமும் சிந்திக்க முடியாது. பெரும்பான்மைச் சிங்கள மக்கள் கூடுதல் செல்வாக்குக் கொடுத்துத் தீர்மானித்ததைச் சிறுபான்மை மக்களாகிய நாம் ஏற்று ஒரே மனதாக அங்கீகரிக்கத் தீர்மானித்தோம்.'

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் முன்னாள் உப சபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் கரணவாய் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியால் தமிழ்க் காங்கிரஸ் எம். பிக்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் கரணவாய் தெற்கு கலட்டிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள மைதானததில் நடைபெற்றது.

'தமிழ்ப் பண்பைக்காக்கவே நாம் அரசியலில் ஈடுபட்டுள்ளோம்; ஒருவரையொருவர் பழிவாங்குவதற்காக அல்ல. அதிகாரம் நீடித்திருப்பது இல்லை. ஆதலால் அப்பாவி ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது மூலம் பழிவாங்கக்கூடாது' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: "இந்நாட்டில் நாம் இரண்டாம்தரப் பிரஜைகளாக இருந்துவருவதை உணர்கின்றோம். சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றாலே இப்புதிய அரசியல் சாசனத்திலும் பங்குபெற முடியும். எப்படி இச்சாசனம் மூலம் எமது இனத்தைப் பாதுகாக்கலாம் என்று ஆழ்ந்து சிந்தித்து வருகின்றோம்.

எமது மொழிக்கும் இனத்துக்கும் இச் சாசனத்தில் இடம் கிடைக்காவிடில் பரம்பரை பரம்பரையாக நாம் 2-ம்தரப் பிரஜைகளாகவே வாழவேண்டி[illegible]யிருக்கும் என்பதை உணர்ந்து செயலாற்றி வருகின்றோம். தமிழ் சிங்கள மக்களிடையே பரஸ்பர நம்பிக்கை தோன்றவேண்டும்.

நல்லூர் எம். பி. திரு சி, அருளம்பலம் பேசுகையில் கூறியதாவது;

'தமிழன் தன்னைத்தானே வழிநடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் படைத்தவனாகமுற் காலத்தில் விளங்கிவந்தான். இன்று தமிழினம் தாழ்வடைந்த நிலையிலிருக்கிறது. தமிழ்க் காங்கிரஸ் தமிழ் மக்களுக்கு வேண்டியவற்றைச் செய்துகொடுக்கிறது. சமுதாயம் வாழ வழிவேண்டும் நாமும் இந்நாட்டுப் பிரஜைகளே என்பதை உணர்த்த வேண்டும்.

குறைபாடுகளைப் பற்றிப் பேசுவதால் பிரயோசனமில்லை. வளரும் சமுதாயத்தைக் கத்திரிக்கோல் போன்று வெட்டிக்கொண்டு போக விடக் கூடாது. அந்நியராட்சிக்கு முடிவு கட்டும் அரசியல் சாசனத்தை மற்றச் சமூகத்தவர்களுடன் சேர்ந்து ஆதரித்து ஜாக்கிரதையாக எமது உரிமைகளைப் பறிகொடாமலும் மற்றவர்களைப் பகையாமலும் பணிபுரிய வேண்டும்."

கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரி பேசுகையில் தமிழினம் இன்று மிகவும் இக்கட்டான நிலையிலுள்ளதுஎன்றுகூறினார்.

லயஞானகுபேரபூபதி தட்சணாமூர்த்தி, சின்னராசா, ஆறுமுகம் கோஷ்டியினரின் மங்கள வாத்தியத்துடன் ஆரம்பமான இவ்விழாவில் வழக்கறிஞர் திரு. மு. செல்லத்தம்பி, த. கா. வாலிப முன்னணி உடுப்பிட்டிக் கிளைச் செயலாளர் திரு. சி. சிவலிங்கராசா, இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஜே. எஸ் வேலும்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

யாழ் சுண்டிக்குளி கலைக் குழுவினரின் 'அடங்காப் பிடாரி' நாடகமும் இடம் பெற்றது.

## கரவெட்டியில் பௌத்த விகாரை

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி ஸ்ரீ நாரத தமிழ்ப் பௌத்த வித்தியாலயத்தில் பௌத்தவிகாரையொன்று வெகு விரைவில் நிறுவப்படவிருக்கிறதாம்.

இப்பௌத்த விகாரையை நிறுவுவதற்கான இடத்தைப் பார்வையிடுவதற்காக அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் பிரமுகர் திரு. டீ ஜீ. குலத்துங்கா (முன்னாள் கல்வி மா அதிபர்) கரவெட்டிக்கு விஜயம் செய்யவிருக்கிறாராம்.

— —

## நெல்லியடி ப. ச., கட்டைவேலி கி. ச. நியமனப்பத்திரம்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடிப் பட்டினசபையின் ஏழு வட்டாரங்களுக்கான தேர்தல் நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 5-ம் திகதி பகல் 10 மணி முதல் 11 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன

கட்டைவேலிக்கிராம சபையின் 14 வட்டாரங்களுக்கான தேர்தல் அபேட்சகர் நியமனப்பத்திரங்கள் அன்றைய தினம் மாலை 3 மணி முதல் 4 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

## சேமிப்பு இயக்கத்தில் கிளிநொச்சி முதலிடம்

### நடமாடும் மக்கள் வங்கி துரிதம்

பருத்தித்துறை, ஞாயிறு

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த சில நாட்களாக மக்கள் வங்கிக் கிளையொன்று நடமாடி வருகிறது; சேமிப்பின் அவசியத்தைப் பொது மக்களுக்கு உணர்த்துதலும், புதிய முதலீட்டுச் சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்தலுமே இதன் பிரதான நோக்கங்களாகும்.

மேற்படி வங்கிச் சேவைக்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் ஏ. ஜே. விக்கிரமசிங்காவும், திரு. ஆ செல்லத்துரையும் நமது நிருபரிடம் கூறியதாவது:

"இலங்கையிலுள்ள ஒன்பது விஸ்தரிப்புப் பகுதிகளில்கிளிநொச்சிப்பகுதியே பெரிதும் ஆர்வம் காட்டி வருகிறது. குறிப்பாக உருத்திரபுரம், இரணைமடு, பரந்தன் ஆகிய இடங்களில் புதிய சேமிப்பு இயக்கங்கள் தீவிரமாக இயங்கி வருகின்றன. ஏராளமான மக்கள், சேமிப்பு இயக்கத்திற்குக் குறிப்பிடத்தக்க ஆதரவு காட்டி வருகின்றனர். புதிய சேமிப்புத் திட்ட மூலம் 6 1/2 வீதப்படி வட்டி பெறுவதற்கும், குறுகிய காலத்தில் சுலபமான முறையில் கடன் வசதி பெறவும் அளிக்கப்பட்டுள்ள வசதியால் அவர்கள் பெரிதும் பயனடைகின்றனர்."

கிளிநொச்சித் தொகுதி மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எல். நேசையா இவ்வியக்கத்துடன் ஒத்துழைக்கும் பரந்தன் இரசாயனத் தொழிலாளருக்கும் விவசாய அதிகாரிகளுக்கும் பிற பிரமுகருக்கும் கடித மூலம் நன்றி தெரிவித்துள்ளார்.

— —

## கைது

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த மாரிமுத்து கந்தசாமி என்பவருக்குச் சொந்தமான களங்கட்டிக் கம்பங்களைத் திருடியதாகக் கூறப்படும் ஆறுபேர்கொண்ட கோஷ்டி ஒன்று சங்கானைப் பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டது கந்தசாமி என்பவருக்குக் காயம் ஏற்படுத்தி அவரது சொத்துக்களையும் அபகரித்துச் சென்றதாக இவர்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

—

## சங்காபிஷேகம்

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பறை மகாமாரி அம்மன் கோவில் மகாசங்காபிஷேகம் இம்மாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

— —

## நியமனம்

## பூட்டு இல்லாத தபால் பெட்டி

சுழிபுரம், திங்கள்

சித்தங்கேணிச் சந்திக்கு [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி
★ அடங்காபிடாரி புகழ் நடராசா

நடித்த

இலங்கையின் இயற்கைக் காட்சிகளைக்கொண்டு
உருவாக்கப்பட்ட சித்திரம்.

மீனு மூவிஸ்

# வெண்சங்கு

தயாரிப்பு: டைரக்ஷன்: W. M. S. தம்பு



இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா] காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன் | சங்கீதம் K V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


ஷதன் மூலம் தான் பிரச்சனைகளுக்கு முடிவு காணலாம். சமஷ்டி அமைப்பின் மூலம் எமது நாட்டு பிரச்சனைகளை ஒருபோதும் தீர்த்துக் கொள்ளமுடியாது. சிறப்பாக தமிழ் இனத்துக்கு சோஷலிசப் பாதையில் மாத்திரமே பலாபலன் உண்டு."

சுன்னாகம் பட்டினசபையின் ஆதரவில் இயங்கிவரும் ஆராய்வுக்குழு நடத்திய கருத்தரங்கில் பேசிய முன்னாள் உடுப்பிராய் இந்துக் கல்லூரி அதிபரும் கம்யூனிஸ்ட்கட்சிப்பிரமுகருமான திரு. ஏ வைத்திலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் பட்டின சபை விளையாட்டரங்கில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. ஏ. வைத்திலிங்கம் மேலும் பேசியதாவது:-

இந்திய நாட்டிலிருந்து நமது கலை, கலாசாரங்களை வளர்ப்பதற்கென பல சினிமாப் படங்களை வரவழைக்கிறோம். பல ஆங்கிலப் படங்களை ஆவலுடன்பார்க்கிறோம். ஆனால் நமது சகோதர மொழிப் படமான சிங்கள படங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. சிங்கள கலாசாரங்களை தமிழரும் தமிழ்க் கலாசாரங்களை சிங்களவருமாக புரிந்துகொண்டு ஒன்றுபட்டு நம்பிரச்சனைகளை அணுகி தீர்த்துக் கொள்ள நாம் முன்வர வேண்டும். ——

## இலங்கைக்கு கனடா மாவு

கொழும்பு, திங்கள்

இலங்கை அரசாங்கத்துக்கு கனடா 170 லட்சம் ரூபா பெறுமதியான கோதுமை மாவை வழங்கவிருக்கிறது. கொழும்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இத்தொகை கடந்த வருடங்களிலும் பார்க்க 10 லட்சம் ரூபா கூடுதலாகும்.


MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.,
Stantley Parkar
Tommy Steele
in
WHERE'S JACK
(Colour)



REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9 45-P.M.
Poya, Pre-poya 4 Shows
Peter Sellers,
Ursula Andress
in
CASSINO ROYALE
(Panavisions-Technicolor)


மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராக அநுராதபுர எம். பியும் ஆட்சி மன்ற விவகார அமைச்சருமான கே. பி. இரத்தின நாயக்கா கலந்துகொள்ள விருக்கிறார்.

— —

## கனிஷ்டபல்கலைக் கழகம்

### நீல இல்லம்முதலிடம்

மாவிட்டபுரம், திங்கள்

பலாலி சேர் பொன். இராமநாதன் கனிஷ்டபல்கலைக்கழகத்தின் முதலாவது வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டியில் நீலஇல்லம் 1-வது இடத்தையும் பச்சை இல்லம் 2-வது இடத்தையும், சிகப்பு இல்லம் 3-வது இடத்தையும் பெற்றன.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் நடந்த இவ்விளையாட்டு போட்டியில் கலாநிதி சுந்தரலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

திருமதி சுந்தரலிங்கம் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களை வழங்கினார்.

— —

## நிதி உதவி

ஒட்டுசுட்டான், திங்கள்

ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாசாலையைச் சேர்ந்த ஒரு தலைமைஆசிரியரும், நான்கு உதவி ஆசிரியர்களும் ரூபா 50 நாட்டைக்காக்கும் நிதிக்கென அனுப்பியுள்ளனர்.

0 0 0

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை உத்தியோகத்தர்களும் ஐம்பதுக்கு மேற்பட்ட ஊழியர்களும் தமது ஒருநாள் வேதனத்தை நாட்டைக்காக்கும் நிதிக்கு அனுப்பியுள்ளனர்.

... ...

## 'தமிழரும் அ நி சபையும்'

உடுவில், திங்கள்

சுன்னாகம் பட்டினசபையின் ஆதரவில் இயங்கிவரும் ஆராய்வுக்குழுக் கருத்தரங்கில் 'தமிழரும் அரசியல் நிர்ணய சபையும்' என்ற தலைப்பில் வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு அ. தியாகராசா இம் மாதம் 9ந் திகதி மாலை உரையாற்றவிருக்கிறார். இந் நிகழ்ச்சி சுன்னாகம் பட்டினசபை விளையாட்டரங்கில் நடைபெறும்.

துக்கும் இச் சாசனத்தில் இடம் கிடைக்காவிடில் பரம்பரை பரம்பரையாக நாம் 2-ம்தரப் பிரஜைகளாகவே வாழவேண்டி

ளுக்கான தேர்தல் அபேட்சகர் நியமனப்பத்திரங்கள் அன்றைய தினம் மாலை 3 மணி முதல் 4 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

# புதிய அரசியல் திட்டம் காங்கிரஸ் ஆராயும்

உடுப்பிட்டி, திங்கள்

கூட்டணி அரசாங்கம் உருவாக்கிவரும் புதிய அரசியல் திட்டம் பற்றி ஆராய்வதற்கான மகாநாடொன்றைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி இம்மாதம் 8ந் திகதி நடாத்தவிருப்பதாக அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள இல்லத்தில் நடைபெறும் இம்மகாநாட்டில் தமிழ்க் காங்கிரஸ் எம். பிக்கள், கட்சிப் பிரமுகர்கள், கல்விமான்கள் கலந்துகொள்வர்.

# "ஈழத்தின் தேவைகளை நிர்ணயிக்கும் பொறுப்பு எழுத்தாளனுடையது"

### இலக்கியக் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"இலக்கியவட்டத்தை அரசாங்கம்பயன்படுத்தக் கூடியதாக நல்ல சேவைசெய்ய வேண்டும், தமிழோடு இசைந்த பண்பாட்டை விலகாததாக அது இயங்கவேண்டும் இந்த வழியே இலக்கியவட்டத்தின் வழியாகும்" என யாழ். இலக்கியவட்ட முன்னாள் தலைவர் கவிஞர் வி. கந்தவனம் நேற்று நடைபெற்ற இலக்கிய வட்டக் கருத்தரங்கில் பேசுகையில் தெரிவித்தார்.

'எழுத்தாளர் கடமையென்ன' என்னும் பொருள் பற்றி திரு. எஸ். யூ. சோமசேகரம் பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு:

அடிமைப்பட்டுக் கிடக்கின்ற நிலையில் புதிய சிந்தனை விழிப்பை உடையவர்களாக எழுத்தாளர்கள் தோன்றுவது சரித்திரம் கண்ட உண்மையாகும். பிரச்னைகள் தீர்வுகாணப்படாமல் நிரந்தரமாக இருக்கின்ற நிலைதான் அரசியல்வாதிகளுக்குரியதாகும். ஆனால் இலக்கிய சிருஷ்டியாளன் இதற்கு அப்பாற்பட்டவன் அவர்களுக்குரிய நிலை நிரந்தரமானது. சமூகத்தை வழிப்படுத்திச் சிந்திக்கத் தூண்டுகின்றவர்களே எழுத்தாளர்கள்.

இன்றைய புதிய இலங்கைக்கு எதுதேவையென்று நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு எழுத்தாளர்களுடையதாகும்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த இலக்கிய வட்டத் தலைவர் செங்கையாழியான் தமது பேச்சில் தெரிவித்ததாவது:-

"இன்று இந்தியப் பத்திரிகைகளைத் தடைசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்புகின்றோம். இந்தியப்படங்களைத் தடைசெய்யவும்முற்படுகின்றோம். நமது கலைஆக்கங்கள் பல இன்னும் இங்கு தேசிய மணம் கமழ்வதாக அமையவில்லை. நமக்கென்ற சரியான கலாசாரத்தைக் கட்டியெழுப்பவேண்டியது தான் நமக்குரிய கடமையாகும்."

இரசிகமணி கனகசெந்திநாதன் பேசும்போது இன்றைய நாளில் இலக்கியம் பற்றிப் பேசுபவர்கள் மூன்று விதமான கொள்கைகளை உடையவராயுள்ளனர் திரும்பத் திரும்ப ஒரே கதையை பிரச்சினையை சுட்டிக் காட்டுபவர் ஒருசாரார் மறுசாரார் அரசியல் இலாபத்தைக் கருதுபவர். ஏனையோர் தூய்மையை வளர்க்க முற்படுவார்கள். இலக்கியமென்பது அரசியலுக்கு அப்பால் சமுதாயத்தை வளப்படுத்துவதாக அமைய வேண்டும் என்பதுதான் இலக்கிய வட்டத்தின் நோக்காகும் எனச் சொன்னார். மத்திய கல்லூரி நூலகர் திரு. கா. மாணிக்கவாசகர் பேசுகையில் இலங்கையில் வாசிகசாலைக்குத் தேவையான அளவுக்கு நூல்கள் ஆக்கப்படவில்லையென்றும், கதை இலக்கியம் வளர்ந்துள்ள அளவுக்கு ஏனையதுறைகளை யடக்கிய நூல்கள் குறைவாகவே உள்ளதென்றும் வாசிகசாலைத் தேவைகளுக்கான தமிழ் நூல்களுக்கு உண்மையில் தமிழகத்தையே நம்ப வேண்டியிருப்பதாயும் கூறினார்.

## பூட்டு இல்லாத தபால் பெட்டி

சுழிபுரம், திங்கள்

சித்தங்கேணிச் சந்திக்கு அருகாமையிலுள்ள தபால் பெட்டி, தபால் போடமுடியாதநிலையில் பழுதடைந்து இருக்கிறது. பெட்டிபூட்டப்படாத நிலையில் இருக்கிறதாம். பூட்டுஇல்லை என்பதை அறியாத பொது மக்கள் கடிதங்களை அதனுள் போட்டு விடுவதாகவும் தெரிகிறது

பிஷேகம் இம்மாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

— —

## நியமனம்

வேலணை, திங்கள்

வேலணை செட்டிபுலம் அரசினர் பாடசாலையின் புதிய தலைமையாசிரியராக திரு எஸ். அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.


## தேவை

பெண் காசாளர் (கேஷியர்) ஒருவரும், பெண்கன்வசர்களும், தையல்வேலையில் ஓரளவு அனுபவமுள்ள பெண்களும் தேவை. காசாளர் ரூபா 500/ பிணைப்பணம் செலுத்தக்கூடியவராயிருக்க வேண்டும். நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும்.

மனேஜர் M.S.T.
95/3, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.



KALANILAYA CAMBRIC
கலாநிலைய கேம்பிறிக்
WRITING PADS
'லெற்றர் பாட்ஸ்'

நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்
விற்பனைக்குண்டு

மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:

# 'ஈழநாடு'
(வர்த்தக அச்சகப் பகுதி)

55, வெண்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

# ஈராக் போக்குப்பற்றி அதிபர் நாஸர் சீற்றம்

## கடுமையான வார்த்தைகளால் அந்நாட்டு அதிபருக்கு கடிதம்

### லிபியா தலைநகரில் அரபுத்தலைவர்கள் கூடுகிருர்கள்

கெய்ரோ, ஆகஸ்ட் 3

அரபுநாடுகள் தங்களுக்குள் ஏற்பட்டுள்ள கருத்துவேற்றுமைகளைப் போக்கிக்கொள்ளும்வகையில் லிபியாத் தலைநகரில் மாநாடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே சமயம், ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர் கேணல் அப்துல்நாஸர் ஈராக் அரசாங்கத்தைக் கடுமையாகக்கண்டித்து ஒரு செய்தியை அந்த நாட்டு அதிபருக்கு அனுப்பியிருக்கிருர்.

அதிபர் நாஸரின் செய்தி கெய்ரோ வாஞெலியில் ஒலிபரப்பப்பட்டது அமெரிக்க யோசனைகளை ஐக்கிய அரபுக்குடியரசு ஏற்றுக்கொண்டதற்குஈராக்தெரிவித்துள்ள எதிர்ப்புகளை அதிபர் நாஸர் கண்டித்திருக்கிருர்.

இஸ்ரேலுடனுன போரில் ஈராக் ஏன் கலந்துகொள்ளவில்லை. இஸ்ரேல் நிலைகள் மீது ஈராக் விமானங்கள் ஏன் குண்டுவீசவில்லை. இஸ்ரேலும் ஈராக் மீது ஏன் தாக்குதல் நடத்தவில்லை என்றெல்லாம் அதிபர் நாஸர் தமது கடிதத்தில் கேட்டிருக்கிருர்.

இன்று லிபியா தலைநகரில் அரபு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கூடிப்பேசவிருக்கிருர்கள். அமெரிக்க அமைதி யோசனைகளை அரபு நாடுகள் சில ஏற்றுக்கொண்டுள்ளதால் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைப் போக்கிக் கொள்ளும் விதத்தில் அரபுத் தலைவர்கள் இன்று மகாநாடுநடத்துகிருர்கள். இந்த மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாக அல்ஜீரியாவும், ஈராக்கும் பயமுறுத்தியுள்ளன. ஐக்கிய அரபுக் குடியரசும், ஜோர்டானும் தமது முடிவுகளை மீண்டும் யோசித்துப்பார்ப்பதாய் இருந்தால் மாத்திரமே மாநாட்டில் கலந்துகொள்ள முடியும் என்று ஈராக் அறிவித்திருக்கின்றது.

மாநாட்டில் கலந்துகொள்வதற்காக லிபியா தலைநகரான திரிபோலியில் அரபு நாட்டு தூதுகோஷ்டிகள் வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றன. லிபியா அதிபர் எகிப்திய அதிபர் நாஸருடன் ஆலோசனை நடத்துவதற்காக கெய்ரோ வந்திருக்கிருர். அவர் தம்நாட்டுத்தலைநகரில் அரபு மாநாட்டில் கலந்துகொள்வதற்குத்திரும்பிப்போவதற்கு முன் பாக்தாத்துக்கும் போவார்.

### ஜாரிங் வந்தார்

மேற்காஸிய அமைதிக்கான ஐ. நா. தூதுவர் டாக்டர் குஞர் ஜாரிங் சுவிட்ஸர்லாந்திலிருந்து நியுயோர்க் வந்துசேர்ந்துள்ளார். பத்திரிகை நிருபர்களிடம் அவர் எதுவும்கூறமறுத்துவிட்டார் ஐ. நா. பொதுச்செயலாளர் யுதாண்டின் விசேஷ அழைப்பின்மீது அவர் ஐ. நா. தலைமைக் காரியாலயத்துக்கு வந்துள்ளார்.

### வல்லரசுகள் ஆலோசனை

மேற்காஸிய நிலைமை குறித்து மேற்கு வல்லரசுகள் மீண்டும் கூடிப்பேசவிருக்கின்றன. அடுத்த வெள்ளியன்று நான்கு வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகளும் கூடிப்பேசவிருக்கிருர்கள்.

---

## ஹவானுவில் இறக்கப்பட்ட ஜம்போஜெட்

### காஸ்ட்ரோ நேரில் பார்த்தார்

நியுயோர்க், ஆகஸ்ட், 3

அமெரிக்காவிலிருந்து 138 பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த ஜம்போஜெட் விமானமொன்றை, தனிநபர் ஒருவர்வழிமறித்துக் கியூபாவுக்குக் கொண்டு சென்ருர். இவ் விமானம் ஹவானுவில் பத்திரமாக தரை இறங்கியது,

ஹவானுவில் இறங்கிய இந்த விமானததை துப்பாக்கிமுனையில் திசை திருப்பிய அந்த நபர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். விமானம் உடனடியாகவே திருப்பியனுப் பப்பட்டது. கியூபா பிரதம மந்திரி டாக்டர் பிடல்கஸ்ரோ நேரடியாக விமானநிலையத்துக்கு வந்துபிரயாணிகளைத்திருப்பியனுப்பிஞராம். பிரயாணிகளுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் குறித்து காஸ்ரோ பெரிதும் கவலைப்பட்டதாகக் கூறப்பட்டது. விமானம் பிரயாணிகளுடன் அமெரிக்காவுக்குத் திரும்பியுள்ளது. ஜம்போஜெட் விமானமொன்று திசைதிருப்பப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

---

## அறுவை சிகிச்சையிலும் புரட்சிகர முன்னேற்றம்

லண்டன், ஆகஸ்ட் 3

''டாக்டர், இந்த அறுவைச் சிகிச்சையின் பின் பெரிய வடு இருக்குமா? இந்த வடுவைப்போக்கவே முடியாதா?'' என்று கண்களில் நீர் ததும்பத் தம் வைத்தியரைப் பார்த்துப் பலர் கேட்பது சகஜம். வைத்தியர்களும் இதற்கு நேரடியான பதில் கூருமல் பூசி மெழுகுவதுண்டு காரணம் அவர்களுக்கே உண்மையாக இக்கேள்விக்கானமறுமொழி தெரியாது. அறுவை மருத்துவத்தில், தையல்போடும் பொழுது, அது ஒவ்வோர் தோலையும் பொறுத்தே ஒட்டிக்கொள்கிறது சிலரின் தோல் இந்தத் தையல்நூலை ஏற்கமறுத்து விடுகிறது, இதனுல் நோயாளிக்கு வேதனையுடன் பெரியவடுவும் ஏற்பட்டுவிடுகிறது.

இந்த அறுவை மருத்துவத்தில் பாவிக்கப்படும் தையல்நூல் விலங்கின்: பெரும்பான்மையாக ஆட்டின் குடல், தசைநாளங்களில் இருந்து தான் இழைக்கப்படுகின்றது. இது ஒரே சமமாக இருப்பதில்லை அத்துடன் இவை மனித உடலில் தைக்கப்பட்டதும் இதற்கும் எமது உடலில் இருக்கும் 'என்ஸைம்' எனப்படும் செரிமானப் பொருளுக்கும்ஒருபோரேஏற்பட்டு விடுகிறது உடலிலுள் புகும் வேற்றுப் பொருட்களை அகற்றி அல்லது அழிக்கும் வேலை இச்செரிமானப் பொருளினுடையது. எனவே இது இத்தையல்நூலைவேற்றுப்பொருளாகக் கருதி அழிக்கப்பார்க்கிறது. இதனுல் நோயாளிக்குஇடைவிடாத நோவும் ஒருவித எரிவும் ஏற்படுகிறது.

டெக்ஸியன் என்பது அறுவை வைத்தியத்தில் பாவிக்கக்கூடிய ஒரு புதிய தையல்நூல் இது செயற்கை நூலிழை பொகிளைகொலிக் அமிலத்திளருந்து இது செய்யப்படுகிறது மனித உடம்பில் இருக்கும் ஓர் அணுவின் தன்மையை இது கொண்டிருப்பதால் செரிமானப் பொருள் இதனை அழிக்கவோ அகற்றவோ முற்படுவதில்லை இதனுல் எரிவு ஏற்படமாட்டாது. அதற்குப் பதிலாகஇத்தையல்நூலிழை உடம்பில் பொருத்தப்பட்டதும் ஒருவித இரசாயன மாற்றம் ஏற்பட்டு பின்படிப்படியாக உடம்பை விட்டேவெளியேறிவிடுகிறது நாம் குடிக்கும் நீரானது உடம்பினுள் சென்று தன் வேலைகளைச் செய்துவிட்டுப் பின் சிறுநீராக வெளிப்படுவது போன்ற இயக்கத்தைத் தான் இச்செயற்கைநூலிழையும் பின்பற்றுகிறது,

உடம்பினுள் தையல் போடும்பொழுது நூலானது சிக்குப்படாமல் கையில் ஒட்டிக்கொள்ளாமல்நேராக இருக்க வேண்டும் இத்துடன் முடிச்சுப்போடும் பொழுது பஞ்சுநூலில் போடும் முடிச்சுப்போன்று மிக உறுதியாகவும் இருத்தல் வேண்டும் இந்த அதிசயத் தன்மைகளையெல்லாம் கொண்டிருக்கிறது டெக்ஸியன்.

இதுவரை ஒன்பது நாடுகளில்சுமார் 5,000 அறுவைச் சிகிச்சைகள் இந்தப் புதிய செயற்கை நூலிழையைக் கொண்டு செய்யப்பட்டிருக்கின்றன ஓரிரு மாதங்களிலேயேவெட்டிய வடுவும் தைக்கப்பட்டவடுவும் தெரியாதவண்ணம் மிக வெற்றிகரமாக இவை நடந்திருக்கின்றன என்று அறியப்படுகிறது.

கடந்த அறுபது ஆண்டுகளில் இத்துறையில் இடம் பெற்றுள்ள அதிமுக்கிய முன்னேற்றம் இதுதான் என்று உலக வைத்திய நிபுணர்கள் கருதுகின்றனர் காலத்தினூடாக இரும்புக்கம்பியையும் எலியின் நரம்புகளையும் திமிங்கலம், கங்காரு, ஆகியவற்றின் இழையங்களையும் கொண்டு மனித உடம்பில் அறுவைச் சிகிச்சை செய்த வைத்தியர்கள் இனி பாவிக்கப்போவது எமது உடம்பு அணு[illegible]களே விரும்பி ஏற்க[illegible]டிய செயற்கை டெக்ஸியன் நூலிழையாகத்தான் என்பதில் இனிமேலும் சந்தேகமில்லை.

---

## பாலச்சந்தர் வெளிநாடு பயணம்

சென்னை, ஆகஸ்ட் 3

## நோயில்லாத பல் வைத்தியம்

---

## 'தமிழ் நாட்டில் நிலப்பறி இயக்கம் தேவையற்றது'

### கருணாநிதி விளக்கம்

---

## பிரான்ஸின் இன்னுமொரு அணுகுண்டு

பாரிஸ், ஆக. 3

பிரான்ஸ் மேலும் ஓர் அணுகுண்டை காற்றுமண்டலத்தில் வெடித்துச் சோதனை நடத்தியிருக்கின்றது. இந்தச் சோதனைத் தொடரில் இது ஏழாவது குண்டாகும். பலமிக்க ஜலவாயுக்குண்டொன்றைத் தயாரிப்பதற்காக பிரான்ஸ் இந்த அணுகுண்டு சோதனைகளை நடத்திவருவதாகக் கூறப்படுகின்றது. அணுகுண்டு சோதனைகளை பூமிக்கு மேலே காற்றுமண்டலத்தில் சீனுவும் பிரான்ஸும் தான் இப்பொழுது நடத்திவருகின்றன. அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற நாடுகள் பூமிக்கு அடியிலேயே அணுகுண்டுசோதனைகளை நடத்திவருகின்றன.

---

குடியரசு

## தலைவருக்கு புதிய கொடி

கோட்டை, திங்கள்

தேசிய கொடியைச் சரியான முறையில் பாவிக்கவும் அதை ஒழுங்குபடுத்தவும் சட்டமொன்று அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டு விவகார, உள்ளூராட்சிமன்ற அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மேற்படி சட்டத்தைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளார்.

பொதுவாக எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் தேசியக் கொடியைபாவிக்கவேண்டும் எவ்வாறு பறக்கவிடவேண்டும், மற்றும் கொடிகளோடு பறக்கவிடுகையில் தேசியக் கொடி எந்தநிலையில் பறக்கவிடப்படவேண்டும் என்பன போன்ற விதிகளெல்லாம் மேற்படி சட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது. புதிய குடியரசுத் தலைவருக்கு புதியதொரு கொடியை கொண்டுவருவது பற்றியும் அரசாங்கம் ஆராயும்.

---

## சம்பளமின்றி சேவைசெய்வர்

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி, அச்சுவேலி, அல்வாய், புத்தூர் ஆகிய வடபகுதி லுள்ள நான்கு தமிழ்ப் பௌத்த பாடசாலைகளிலும் பணிபுரிந்து வரும் 52 வெளி ஆசிரியர்களில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத 16 ஆசிரியர்

---

## கடந்தகாலத்தில் மர நிழலில் கூட்டம்நடத்திளுேம்

### ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேச்சு

மாவிட்டபுரம், திங்கள்

''55 வயதில் கட்டாய ஓய்வு என்ற அரசாங்கத்தின் திட்டம் ஆசிரியர்களிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுவிடயமாக ஆசிரியர் சங்கங்களுடன் அரசாங்கம் கலந்தாலோசியாமல் இம்முடிவுக்கு வந்துள்ளது கவலைக்குரியது. வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இதுதான் ஒரு வழியல்ல. இதுபற்றி நாம் அரசாங்கத்துடன், தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்''

இவ்வாறு ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்க யாழ் கிளையின் வருடாந்தக் கூட்டம் யாழ் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அகில இலங்கை ஆசிரியர் கூட்டுசபை காரியதரிசியும் ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கமயவின் காரியதரிசியுமான திரு. சந்திரபால வீரசேகரா கூறிஞர்,

திரு. வி கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

சென்ற 5 ஆண்டின் ஆட்சியில் ஆசிரிய சங்கங்கள் போராடியபோதும் சில உரிமைகள் மட்டுமேபெறமுடிந்தது. இன்றைய ஆட்சியில் நாம் பல உரிமைகளைப்பெற முடியும். கடந்த 5 ஆண்டு காலத்தில் கூட்டம் நடாத்துவதற்கு பாடசாலைக் கட்டிடங்கள் எமக்கு அனுமதிக்கப்படாதபோது நாம் மரத்தின்கீழ் கூட்டம் நடத்திளுேம்.

சகல தொழிற் சங்கங்களும் ஆசிரியர்கள் இடமாற்றம் அவசியம் என வற்புறுத்துகின்றன. இப்பிரச்னையைத் தீர்க்க அமைச்சர் நல்ல முடிவுக்கு வருவார் என எதிர்பார்க்கிருேம். 1 லட்சத்துக்கதிகமான ஆசிரியர்கள் இருப்பதால் இடமாற்ற சபை ஒன்று அமைப்பது சுலபமானகாரியமல்ல. ஆயினும் ஆசிரியர்கள் பிரச்சினை பற்றி ஆராயக்கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

---

## சாதி அடிப்படையில் மாணவர் அனுமதியா?

### சட்டம் வேண்டுமாம் ஆசிரியர் சங்கம்

பருத்தித்துறை, திங்கள்

''55 வயதில் ஆசிரியர் ஓய்வு பெறவேண்டுமென்ற உத்தரவு காரணமாக பழுத்த அனுபவமும், திறமையும் பெற்ற பல ஆசிரியரின் சேவையை இந்நாட்டின் இளம் சந்ததியினர் இழக்கவேண்டி நேரிடுவதுடன், தமது முதிர்ச்சியடைந்தவயதில் உயர்கல்விப்பட்டம் பெறும் ஆசிரியரும் ஊக்கமற்றுப் போகவேண்டிய நிலைமை ஏற்படலாம். எனவே ஆசிரியர் தொடர்ந்து 60 வயதுவரை சேவையில் இருக்க அனுமதிக்கவேண்டும்''

இவ்வாறு கோரும் பிரேரணை நேற்றுமுன்தினம் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில்நடந்தஸ்ரீலங்கா ஜாதிக சங்க யாழ். கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடபகுதிப் பாடசாலைகளில் சாதி அடிப்படையில் மாணவரிடையே பாகுபாடு காட்டப்படும் வழக்கம் உடனடியாகச் சட்டரீதியாக ஒழிக்கப்படவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

---

## 'நாட்டை வளப்படுத்த முன்வாருங்கள்!'

### — அரசாங்க அதிபர்

உடுவில், திங்கள்

காணி அபிவிருத்திக் கந்தோர்களின்மூலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணிகளையும் காடுகளையும் தமிழ் மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை. சிங்கள மக்களுக்கு தென்னிலங்கையில் காணிகள் வழங்கப்

பொருளாதாரம் மிகவும் மந்த நிலையிலேயே இருந்தது. அந்நியரின் நோக்கம் நம்நாட்டுச் செல்வங்களை அபகரிப்பதும், தம் மதத்தினை வளர்ப்பதுமாகவே இருந்தன. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இயக்கம் தேவையற்றது’

## கருணாநிதி விளக்கம்

சென்னை, ஆகஸ்ட் 3
கம்யூனிஸ்ட் கட்சியினர் ஏற்பாடு செய்யும் நிலப்பறி இயக்கம் அவசியமற்றது என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணாநிதி கூறினார். இம்மாதிரியான நடவடிக்கைகள் அமைதியைத்தான் கெடுக்கும். நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் ஒதுக்குவதற்கான சட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டுவரவிருக்கின்றது. இதனால் நிலப்பறி இயக்கம் தேவையற்றது என்று அவர் கூறினார்.

தமிழ்நாடு அமைச்சரவை முதலமைச்சர் திரு மு. கருணாநிதி தலைமையில் கூடி கம்யூனிஸ்ட் கட்சியினர் நடாத்தவிருக்கும் நிலப்பறி கிளர்ச்சி பற்றி ஆலோசித்தது.

நிலப்பறி இயக்கத்தை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியும் மற்படி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக நிருபர்களிடம் தெரிவித்த கருணாநிதி இந்தஇயக்கம் வன்முறையைத் தூண்டுமென்றும் அடிப்படை உரிமைகளைப் பறிக்குமென்றும் கருதப்படுவதால் ஆழ்ந்த கவலையோடு மந்திரி சபை இதுபற்றி பரிசீலித்ததாகவும் கூறினார்.

தடுப்பு நடவடிக்கையாக நிலப்பறி இயக்கத்தார் முன்னதாகவே கைது செய்யப்படுவார்களா என நிருபர்கள் கேட்டதற்கு அது பற்றி எதுவும் யோசிக்கவில்லை என்றார் முதல்வர் கருணாநிதி.

### பெண்கள் பகுதியில் வாலிபர் அமர்ந்ததால்

# பஸ்ஸில் கைகலப்பு; சாரதி மரணம்

கீழ்பென்னாத்து, ஆக. 3
பஸ் ஒன்றில் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த சீற்றில் ஆடவர் ஒருவர் இருந்ததால் ஏற்பட்ட கைகலப்பில் பஸ் சாரதி மரணமானார்.

நாராயணசாமி என்னும் 27 வயது வாலிபர் பெண்கள் சீட்டில் உட்கார்ந்ததாகவும் பெண்கள் சீட்டில் உட்காரவேண்டாம் என்றும் பெண்களுக்கு அந்த இருப்பிடத்தைக் கொடுக்கும்படியும் பஸ் காப்பாளர் கேட்டதாகவும் இதைத்தொடர்ந்து வாக்குவாதம் ஏற்பட்டு முடிவில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் இக் கைகலப்பில் பஸ் சாரதி காயமடைந்து வைத்தியசாலை செல்லும் வழியில் மரணமானதாகவும் தெரியவந்துள்ளது

நாராயணசாமி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். தீவிர புலன்விசாரணை நடைபெறுகிறது.

# இந்தியாவுக்கு மாவோ நேசக்கரம் நீட்டுகிறார்?

புதுடில்லி ஆகஸ்ட் 3
‘நமது தேசநலன்களுக்கும் பிரதேச ஐக்கியத்துக்கும், ஏற்ப இந்திய அரசாங்கம் சீனாவுடன் பேச்சுநடத்தத் தயாராகவுள்ளது’ என இந்திய உதவி வெளிவிவகார மந்திரி சுரேந்திரபால்சிங் ராஜ்யசபையில் தெரிவித்துள்ளார்.

மா-சே-துங் மே தின வரவேற்பின்போது பீகிங்கிலுள்ள இந்திய தூதுவருடன் கைகுலுக்கி, இந்தியாவுடன் நேசஉணர்ச்சி தெரிவித்ததாக அவர் கூறினார்.

‘சீனாவிடமிருந்து நல்லெண்ண சமிக்ஞையை இந்தியா வரவேற்கிறது’ என்றும் அவர் கூறினார்.

## பெயர்ப் பலகைகளில் சுவரொட்டிகள்

உடுப்பிட்டி, திங்கள்
நெல்லியடிப் பட்டினசபை வீதிகளிலுள்ள பெயர்ப் பலகைகளில், பட்டின சபைத் தேர்தல் சம்பந்தமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதனால் பிற ஊர் மக்கள் வீதிகளைத் தேடிப்பிடிக்க முடியாமல் அலையவேண்டி உள்ளதாம். இதுபற்றி நெல்லியடிப் பட்டினசபை விசேஷ ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாம்.

தடவையாகும்.

## நோவில்லாத பல் வைத்தியம்

லண்டன், ஆக 3
பல் வைத்தியர் தம் சிகிச்சைச் சாதனத்தைக் கையிலெடுக்க, பல்லெல்லாம் கிடுகிடுத்து இரத்தம் நீராக, சோர்ந்து மயங்குபவர்கள் இன்று பலர் இருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் உதவுமுகமாக ஒரு புதிய மருந்தொன்று இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியரிடம் சென்று காட்டிப் பற்களைப் பிடுங்குவதைவிட, பல் வலியின் உபாதையுடனேயே பயந்து வாழும் மக்களுக்கெனவே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் இம் மருந்திற்கு ‘டீஸிபாம்’ என்று பெயர். சிகிச்சையின்போது ஏற்படும் நோவை முற்றாகப்போக்க, இப்பொழுது சாதாரண மயக்கமருந்து கொடுக்கப்படுகிறது. இதற்கு மருந்தைச் செலுத்தும் வைத்தியர், அவருக்கு உதவத் தாதிமார், பின்னர் மயக்கத்திலிருந்து தெளிவுபெற சிகிச்சை இப்படிப் பலபேரும், வசதிகளும் தேவைப்படுகிறது.

இதையெல்லாம் தவிர்த்துவிடுகிறது இப் புதியமருந்து. இதனைப் பல்வைத்தியரே தனித்துநின்று நோயாளிக்கு ஏற்றிவிடலாம். ‘டீஸிபாம்’ ஒருவரது உணர்ச்சிகளையும், நோவை உணரும் தன்மையையும் குறிப்பிட்ட நேரகாலத்திற்கு மழுங்கச் செய்து விடும் சக்தியுடையது. எனினும், வைத்தியர் சிகிச்சையளிக்கும்போது கேட்கும் கேள்விகளை விளங்கி, அதற்கேற்ற பதில்களைக் கூறும் சக்தியும், தமக்கு நடக்கும் சிகிச்சையை அறியும் உணர்வும் அவர்களுக்கு இருக்குமாம். இப் புதிய புரட்சிகரமான மருந்து வெகுவிரைவில் சகல வைத்தியசாலைகளின் பாவிப்பிற்கென பெருமளவில் உற்பத்திசெய்யப்பட போகின்றது.

## அறுவை சிகிச்சை நிலையம்

புலோலி, திங்கள்
மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் இரண்டரை லட்சம் ரூபா செலவில் கட்டப்படும் அறுவைச் சிகிச்சை நிலையமும், எக்ஸ்ரே படம் பிடிக்கும் வார்ட்டும் இரு மாத காலத்திற்குள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாடு பயணம்

சென்னை, ஆகஸ்ட் 3
[...]ணை வித்துவான் திரு எஸ். பாலச்சந்தர் வெளிநாட்டுக்குப் பயணமானார். அமெரிக்கா கனடா ஆகிய நாடுகளில் 26 நாட்கள் சுற்றுப்பயணம் செய்யவிருக்கும் அவர், சுற்றுப்பயணத்தின்போது பல இடங்களில் வீணைக் கச்சேரிகள் நடாத்துவார்.

## 61 வீதமானோர் நிக்ஸனுக்கு ஆதரவு

வாஷிங்டன், ஆகஸ்ட் 3
ஜனாதிபதி நிக்ஸன் தனது பதவியுடன் தொடர்புடைய பணிகளைக் கையாளும் வழிமுறைகளுக்கு 61 சத வீதமான அமெரிக்கர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். நாடுபூராவும் மேற்கொள்ளப்பட்ட பொதுசன அபிப்பிராய புள்ளிவிபர சேகரிப்பில் இருந்து இந்த தகவல் கிடைத்துள்ளது.

பொதுசன புள்ளி விபரங்களைத் தயாரிக்கும் தனியார் நிறுவனமொன்று ஜூலை மாதம் 10-ம் திகதி முதல் 12-ந் திகதி வரை, நாடு பூராவும் 300 இடங்களில் 1523 வயதுவந்தவர்களை சந்தித்து இதற்கான தகவல்களைத் திரட்டியது.

## தீர்மானம் நிறைவேற்றும்

யாழ்ப்பாணம், செவ்
அகில இலங்கையிலுமுள்ள சுருட்டுத் தொழிலாளர் சங்கங்கள் அனைத்தையும் ஒரே கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டுவருமாறு கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்காவைக் கேட்டுக் கொள்வதென்னும் தீர்மானம் தொழிலாளர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டும்’ என்னும்பிரேரணை நேற்று முன்தினம் அகில இலங்கைசுருட்டுத் தொழிலாளர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டத்துக்கு அகில இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு ஆ. துரைராஜசிங்கம்தலைமை வகித்தார்.

செயலாளர் திரு அ. விஸ்வநாதன் பேசுகையில் இந்த நடவடிக்கையினால் சுருட்டுத் தொழிலாளர்கள் நன்மை பெறவும் உயர்ந்தரக சுருட்டுக்களைத் தயாரிக்கவும் வழி பிறக்குமென்றும் தெரிவித்தார்.

விருப்பி ஏற்[...]டிய செயற்கை டெக்ஸியன் நூலிழைகளைத் தான் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

## மிதவை கவிழ்ந்து 150 பேர் பலி

லண்டன், ஆகஸ்ட். 3
கரீபியன் கடலில் இரு தீவுகளுக்கிடையே பிரயாணஞ் செய்து கொண்டிருந்த மிதவை ஒன்று திடீரென மூழ்கியதில் 150 பேர் இறந்ததாகக் அஞ்சப்படுகின்றது. தீவுகளில் தமது ஓய்வு நாட்களைக் கழிக்க 200 க்கும் அதிகமானோர் சென்றனராம்.

இதுவரை 71 பேர் பாதுகாப்புப் படகுகளினால் மீட்கப்பட்டுள்ளனர். மீன்பிடிப் படகுகளும், மற்றும் இயந்திரப் படகுகளும், அமெரிக்க ஹெலிகொப்டர்களும் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளன. சுமார் 12 மைல் தூரத்தைக் கடக்கும்போது. இவ்விபத்து ஏற்பட்டதாம்.

## புரட்சிக்காரரின் கோரிக்கை

மொன்டிவிடியோ, ஆக. 3
உருகுவேயில் இரு வெளிநாட்டு ராஜதந்திரிகளைக் கடத்திச் சென்றுள்ள புரட்சிக் காரர்கள், அரசாங்கம் சிறைபிடித்துள்ள எல்லா அரசியல் வாதிகளையும் விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த ராஜதந்திரிகள் கடத்திச்செல்லப்பட்டது சம்பந்தமாக ஏற்கனவே புரட்சிவாத இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## பாப்பரசரிடம் குருப்பட்டம் பெற்ற இலங்கையர்

உடுப்பிட்டி, திங்கள்
எட்டு வருடகாலம் ரோமாபுரியில் குருத்துவம் பயின்று பாப்பரசர் 6-ம் சின்னப்பரினால் குருப்பட்டம்பெற்ற கரவெட்டியைச் சேர்ந்த வண யோசப் செல்வராசா சுவாமிகளுக்கு கரவெட்டியிலுள்ள கத்தோலிக்க-இந்துமக்கள் வரவேற்பு விழாவொன்றை நடத்தினர்!

பருத்தித்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலை வதிரி ரோ: க. பாடசாலை, சில்லாலை கன்னியர் மடப் பாடசாலை மாணவிகளின் நடனநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பலர் பேசினர்.

[...] நான்கு தமிழ்ப் பௌத்த பாடசாலைகளிலும் பணிபுரிந்து வரும் 52 வெளி ஆசிரியர்களில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத 16 ஆசிரியர்களும் தொடர்ந்து சம்பளமின்றி சேவைசெய்யப் போவதாக அறிவித்துள்ளனராம்.

## ‘வெண்சங்கு’ வை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

திருக்கோணமலை, திங்கள்
தேசியப் பின்னணியில்கலைகள் வளரவேண்டும். அப்பொழுதுதான் தேசிய ஒற்றுமை வளரமுடியும்” என திருகோணமலையில் உள்ள படமாளிகையொன்றில் ஈழத்துத் திரைப்படமான வெண்சங்கு திரைப்படத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் தகவல் ஒலிபரப்பு உதவி மந்திரி ஜனாப் முகமது மஜிது கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஈழத்தில் விரைவில் ஒரு திரைப்படக் கூட்டுஸ்தாபனம் ஆரம்பித்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உள்நாட்டுக்கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையி பலபுதிய வழிமுறைகளைக் கையாண்டு திரைப்படக் கலையை இந்த மக்கள் அரசாங்கம் வளர்க்க இருக்கின்றது.

## 9 ஆசிரியர்களின் இடம் காலி

வல்வெட்டித்துறை, திங்கள்
வல்வை சிவகுரு வித்தியாசாலையில் காலியாகவிருக்கும் ஒன்பது ஆசிரியர்களின் இடங்களையும் உடனடியாக நிரப்பும்படி பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், வடமாநில வித்தியாதிபதிக்குத் தந்தி மூலம் அறிவித்துள்ளார். 30 ஆசிரியர்கள் கடமையாற்றிவந்த இவ்வித்தியாசாலையில் இப்பொழுது 21 ஆசிரியர்களே கடமையாற்றிவருகிறார்கள்.

## நல்லிணக்க சபை

வேலணை, திங்கள்
வேலணைக் கிராமசபை எல்லையை அடுத்துள்ள நாரந்தனைக் கிராமப் பகுதியில் நல்லிணக்கச்சபை நிறுவப்படவுள்ளது. இதற்கான அறிவித்தல் அரசாங்க கசற் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

பரவலாக மொத்தம் 59 பகுதிகளில் நல்லிணக்கச் சபைகள் நிறுவப்படவுள்ளன.

காணிகளையும் காடுகளையும் தமிழ் மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை. சிங்கள மக்களுக்கு தென்னிலங்கையில் காணிகள் வழங்கப்பட்டபோது அவர்கள் அப்பகுதிகளில் நிரந்தரமாகக் குடியேறி வாழ்ந்து அவற்றை திருத்தி முன்னேறியுள்ளார்கள், தமிழ் மக்கள் காணிகளை பெற முன்னிற்கிறார்களே தவிர அவற்றை திருத்தவோ அபிவிருத்தி செய்யவோ முன்வரவில்லை. இந் நிலை மாறி தமிழ் மக்கள் இக் காணிகளில் குடியேறி சிங்கள மக்களைப்போல நாட்டை வளம்படுத்த முன்வர வேண்டும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஸ்தாபகர் ஞாபகதின பரிசளிப்புவிழா வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு எஸ். கதிர்காமநாதன்பரிசளிப்புப் பேருரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்

வடபிரதேச வித்தியாதிபதி திரு வே. சங்கரலிங்கம் தலைமையில் ஆரம்பமான இவ் விழாவில் மேற்படி கல்லூரி அதிபர் திரு சி. ஏகாம்பரம் வருடாந்த அறிக்கையை தமிழ் மொழியில் சமர்ப்பித்து வாசித்தார்,

அரசாங்க அதிபர் திரு எஸ். கதிர்காமநாதன்தொடர்ந்து பேசியதாவது: அரசாங்கம் மேற்கொள்ளும் சகலதிட்டங்களுக்கும் மாணவர்கள் ஆதரவு கொடுத்தல் வேண்டும். நான் படித்த காலத்தில் பாடசாலைப் படிப்பைவிட சாதாரண அன்றாட வாழ்க்கை அனுபவ பாடங்களே என்னை இன்று இந் நிலைக்கு ஆளாக்கியுள்ளது. எனவே நீங்களும் மக்கள் வாழ்க்கையின் அன்றாட நடைமுறைகளை மனதில் கொண்டு காலத்துக்கேற்ற கல்வி பயின்று முன்னேற வேண்டும்.

கைத்தொழில்கள் விஞ்ஞானரீதியில் அமைந்தனவாக அதுவும் அவ்வக்கிராமத்துக்கேற்றனவாக அமைந்து வளர்ச்சி பெற்றால்நமது பொருளாதாரம் வளர்ச்சி பெறும், எமது தேவைகள் முற்றுப்பெறும். இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் வாழ்க்கைச் செலவு போன்ற பலபிரச்னைகளுக்கும் தீர்வு காண்பதாகவும் அமையும்.

வடமாநில வித்தியாதிபதி திரு. வே. சங்கரலிங்கம் ஸ்தாபகர் ஞாபக உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

அந்நியர் நம் நாட்டை ஆண்ட காலத்தில் எமது [...]தது. அந்நியரின் நோக்கம் நம்நாட்டுச் செல்வங்களை அபகரிப்பதும், தம் மதத்தினை வளர்ப்பதுமாகவே இருந்தன. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் மிஷனரிமார்கள் தனித்துவம் பெற்றிருந்தனர். ஆனால் ஆங்கில ஆட்சியில் சில மாற்றம் ஏற்பட்டு மிஷனரிமார்களரல்லாதவர்களும் கல்விக்கூடங்களை அமைக்க அரசாங்க உதவி கிடைத்தது. அக்கால கட்டத்தில் தென்னிலங்கையில் ஒல்கொட், வடஇலங்கையில் ஆறுமுகநாவலர், கந்தையா உபாத்தியாயர் போன்றோர் இக்கல்வி நிலையங்களை ஸ்தாபித்தனர் கஷ்டங்களை பெரிதெனக் கொள்ளாது மக்களுடைய நலன் கருதி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இக்கல்வி நிலையங்கள் இன்று அவர்களின் கனவுகளை நினைவாக்கி நிறைவுபடுத்தி வருகின்றன.

திருமதி கதிர்காமநாதனால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் நன்றி கூறினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 4—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 சித்திரம், 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**
பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**
மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 நிலையஒலிப்பதிவுகள்.

இரவு 6-00வாத்தியஇசை, 6-30 பேச்சு, 6-45விவசாயம், 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் கேட்டவை, 10-30செய்தித் தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உண்மையான எந்தக்காரியத்தையும் சாதிப்பதற்கு முதல்படியாக நமது நெஞ்சத்தில் அஞ்சாமை வேரூன்றி நிற்கவேண்டும். சமய உணர்ச்சி விழிப்படைந்தால் அன்றி, அஞ்சாமை என்றநிலையை நாம் அடைய முடியாது.

—மகாத்மா காந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம்
19-ந் திகதி (4-8-70)

## பாகுபாடு கூடாது

'இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படும்பொழுது இலங்கையர்களிடையே வம்சாவளிப் பிரஜைகளென்றும் பதிவுப் பிரஜைகளென்றும் பாகுபாடு இருக்கக்கூடாது' என்று நேற்றுமுன்தினம் கொளுப்பிட்டியில் நடந்த ஒரு பூர்வாங்க கருத்தரங்கில் ஒருமனதாக வலியுறுத்தப்பட்டது ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நியமனப் பிரதிநிதியுமான ஜனாப் ஏ. அஸீஸ் இக்கருத்தரங்கை ஏற்பாடுசெய்திருந்தார். வம்சாவழிப் பிரஜைகள், பதிவுப் பிரஜைகள் ஆகியோருக்கிடையில் பாகுபாடு இருக்காதமுறையில் புதிய அரசியலமைப்பு உத்தரவாதமளிக்கக் கூடிய நடவடிக்கைகளை ஒருமனதாக மேற்கொள்ளவேண்டுமென்றும் கருத்தரங்கில் வேண்டுகோள் விடப்பட்டது. வம்சாவழிப் பிரஜைகளுக்கும் பதிவுப்பிரஜைகளுக்குமிடையில் கடந்தகாலங்களில் பாகுபாடு காட்டப்பட்டு வந்திருப்பதாலும் இதேநிலை நீடிக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாலும் புதிய அரசியல் அமைப்பு "பாகுபாடு இருக்காதமுறையில்" உத்தரவாதமளிக்கக்கூடியதாக அமைய வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதே.

இலங்கையைக் குடியரசாக்கும் பிரகடனத்தில் இலங்கைக் குடிகள் எல்லோருக்கும் பூரண சுதந்திரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இலங்கையில் வசிக்கும் எல்லோருக்கும் என்று சொல்லப்படவில்லை. [1] இலங்கையர்கள் [2] இந்திய - பாகிஸ்தானிய சட்டப்படி பிரஜையானவர்கள், [3] நேரு — கொத்தலாவல ஒப்பந்தப்படி பதிவானவர்கள், [4] சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி பதிவானவர்கள் என்று பலவகையினர் இருக்கின்றனர்.

இலங்கைப் பிரஜைகளாகப்

வர்களிடை ஏகரோகம்இருக்கலாமாயின் அது எப்படி உண்மை சோஷலிஸமாகும்?

"இன, மத, அரசியல் வேறுபாடுகளை விடுத்து மனிதகுலத்துக்குச் சேவை செய்தலையே ஒருவன் தன் தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும்" என்று கவர்னர் ஜெனரல் சில தினங்களுக்குமுன் ஒரு வைபவத்தில் அறிவுறுத்தியிருந்தார் இன, மத பாகுபாடின்றி சகலமக்களும் உரிமைகளுடன் வாழவேண்டுமென்பதே தங்கள் விருப்பமென்றும் இதை நிறைவேற்றுவதே தங்கள் நோக்கமென்றும் பிரதமர் முதல் முக்கிய அமைச்சர்கள் வரை அடிக்கடி உறுதி கூறிவருகின்றனர்

மக்கள் அனைவரின் அடிப்படை உரிமைகளுக்கும் உத்தரவாதமளிக்கப்படுமென்று கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூட்டணி அரசின் முதலாவது சிம்மாசனப்பிரசங்கத்திலும் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. வம்சாவழிப் பிரஜைகள் பதிவுப்பிரஜைகள் என்ற பாகுபாடு இல்லாமல் சகல மக்களையும ஒருமுகமாக நடத்தும் அம்சம் புதிய அரசியல் அமைப்பில் இடம்பெற வேண்டும்.

பிரஜாவுரிமை சம்பந்தமாக இலங்கையில் இயற்றப்பட்ட சட்டங்கள் முழுவதும் மீண்டும் ஆராயப்பட்டு, பிரஜைகளுக்கிடையில் காட்டப்படும் பாகுபாடு ஒழிக்கப்பட்டால்தான் இங்கு உண்மையான தேசியஐக்கியம் நிலவவும் இந்த நாட்டின் மீது உண்மையான விசுவாசம் செலுத்தவும் வழிபிறக்கும். இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொண்டபின்னரும் அவர்களைச் சந்தேகப்பிரஜைகளாகக் கருதும் சட்டங்கள் இருந்தால் அவர்கள் நாட்டிலே நிம்மதியாகவும் பயமின்றியும், சரிசமமாகவும் வாழமுடியாமற்போகும்.

சுவிட்சர்லாந்தின் அரசியல் அமைப்பு (3)

# ஒவ்வொரு கட்சிக்கும் வீதாசாரப்படி வாக்குகள்

(நேற்றையதொடர்ச்சி)

தேசிய கவுன்சில் அமைப்பை இனிக்கவனிப்போம். தேசிய கவுன்சிலுக்குப் பிரதிநிதிகளை வாக்காளர் நேரடியாகத் தெரிவுசெய்கிறார்கள். இரகசிய முறையில்வாக்குப்பதிவு நடைபெறுகிறது. ஒரு காண்டனோ அல்லது அரைக்காண்டனோ ஒரு தேர்தற்தொகுதியாகும். 36 ஆயிரம் வாக்காளர்களுக்குகுறைந்த காண்டன்களேஒருபிரதிநிதியைத் தெரிவுசெய்யும். மற்றவை எல்லாம் ஜனத்தொகைக்குத் தக்கபடி பல தொகுதிகளாகும்

1940-ம் வருட ஜனத்தொகைக் கணக்கின்படி பெர்ன் தொகுதி 33 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தது.

ராஜாங்க கவுன்ஸிலில், பெடரல் (சமஷ்டி) கவுன்சிலில் மத போதகர்கள், சமஷ்டி அதிகாரிகள் முதலியோர் தேசிய கவுன்சில் தேர்தலில் போட்டியிடமுடியாது.

கிடைக்கும் வாக்குகளின் வீதாசாரத்துக்குத் தக்கபடி ஒவ்வொரு கட்சிக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்படும் உதாரணமாக ஒரு காண்டனில் 60 ஆயிரம் வாக்காளர் இருந்து அதில் 'அ' இடாப்புக்கு 36 ஆயிரம் வாக்குகளும் 'ஆ'வுக்கு 12 ஆயிரம், 'இ'னவுக்கு 6 ஆயிரம், 'ஈ' இடாப்புக்கு 5 ஆயிரம், 'உ' வுக்கு ஆயிரம் வாக்குகளும் கிடைப்பின் அந்தக் காண்டனுக்குரிய ஸ்தானங்கள் முறையே 6,2,1,1,0 என்று ஒவ்வொரு கட்சிக்கும் பங்கீடு செய்யப்படும். ஒவ்வொரு இடாப்பிலும், அதிகமான வாக்குகள் பெற்ற அபேட்சகர்கள் மேற்குறித்த விகிதாசாரப்படி பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுவர். ஒரு வாக்காளர் ஓர் அபேட்சகருக்கே தனக்குரிய வாக்குகளில் இரண்டையும் 'குவியல்' முறையில் அளித்து அவர் தெரிவுசெய்யப்பட உதவலாம். யாராவது 15 வாக்காளர் சேர்ந்து ஓர் இடாப்பைத் தயாரித்துதேர்

டது.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை தேசிய கவுன்சிலுக்குப் பொதுத்தேர்தல் நடைபெறும் அக்டோபர் மாதம் கடைசி ஞாயிறுதான் தேர்தல்தினம். அடுத்தடிசம்பர் ஆரம்பத்தில் புதியசபை கூடும் தேசிய சபையிலும் ராஜாங்கசபையிலும் ஒவ்வொரு மெம்பரும் தனது தாய்மொழியில் பேசலாம். ஆனால் 'டிஸினோப்' பகுதிப் பிரதிநிதிகள் தங்கள் தாய்மொழியான இத்தாலிய பாஷையில் பேசாமல் மற்றவர்கள் விளங்கிக்கொள்வதற்காக பிரெஞ்சு மொழியில் பேசுகின்றனர். சபை நடவடிக்கைகள் அமைதியாகவும் ஒழுங்காகவும், கண்ணியமாகவும் இருக்கும். நிர்வாகிகளுடன் ஒத்துழைப்பதால் அதிக பலன் கிடைக்கின்றது.

### ராஜாங்க சபை

ராஜாங்க சபைக்கு ஒவ்வொரு காண்டனும் இரு மெம்பர்களையும், ஓர் அரைக்காண்டன் ஒரு மெம்பரையும் அனுப்புகின்றது. சமஷ்டி அரசியலை மாற்றுவதற்கான விடயங்களில் அரைக்காண்டனுக்கு அரைவாக்கே உண்டு. மூன்று காண்டன்கள் இரு அரைக்காண்டன்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அரைக்காண்டன் ஒவ்வொன்றுக்கும் பூரணசுயாட்சி உரிமையுண்டு. ஒவ்வொரு காண்டனும் ராஜாங்க சபைத்தேர்தல் விடயமான நடைமுறைகளைத்தானே சுதந்திரமாக வகுத்துக்கொள்ளலாம். சில காண்டன்கள் தங்களது 'பெரிய கவுன்சில்' மூலம் ராஜாங்கசபைக்கு மெம்பர்களை மறைமுகமாகத் தேர்தல் மூலமும் அனுப்புகின்றன. சமயபோதகர்கள் சமஷ்டி அதிகாரிகள் தெரிவு செய்யப்படலாமா, கூடாதா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் உரிமையும்காண்டனுக்கு உண்டு. இதற்கான விதிகளைத் தலைமை அரசாங்கம் நிர்ணயிப்பதில்லை.

### சமஷ்டி சபை

மல்ல, வழக்கம்தான். 1911ம் வருடம் முதல் இத்தாலிய ஸ்விட்சர்லந்துக்கும் அக்கவுன்சில் ஒரு ஸ்தானம் அளிக்கப்பட்டுள்ளது. அதிலே மற்ற 18 காண்டன்களிலிருந்தும் 3சமஷ்டிக் கவுன்சில் மெம்பர்களே இருப்பர்.

சமஷ்டிக் கவுன்சில் ஒவ்வொருவருக்கும் வருடத்துக்கு 40 ஆயிரம் பிராங்க் (ஏறத்தாழ 40 ஆயிரம்ரூபா) சம்பளம் தலைவருக்குவிசேஷ அதிகாரம் இல்லாவிடினும், விருந்துப்படிச்செலவு அளிக்கப்படுகிறது. இந்தக் கவுன்சிலர்கள் மீண்டும் தெரிவு செய்யப்படலாம். இக்கவுன்சிலர்கள் மக்களுடன் சரிசமமாகப் பழகுகின்றார்கள். ஒரு கவுன்சிலரை 'ஏன் 3ம் வகுப்பில் பிரயாணம் செய்கிறீர்கள்?' என்று கேட்டதற்கு நான்காம் வகுப்பு இல்லையாதலால்!' என்றாராம் சமஷ்டி சபை ஸ்திரமாக இருந்து வேலை செய்வதால் விரிவான முறையில் திட்டமிட்டு நிர்வாகம் நடத்தமுடிகிறது. 60 வயதுக்கும் 70 வயதுக்குமிடையே அவர்கள் பதவியிலிருந்து விலகி, தங்கள்சொந்த காண்டனுக்குத் திரும்பி, சமூகசேவையில் ஈடுபடுகின்றனர். சர்வதேச விஷயங்களில் உதவுகின்றார்கள்.

பெர்ன் நகரில்தான் சமஷ்டிக்கவுன்சிலும் இருசபைகளும் இருக்கின்றன. அங்கு நிர்வாக அதிகாரம் அந்தக் காண்டனுக்குத்தான் சமஷ்டிச்சபைக்குத் தனியே பூமி ஒதுக்கப்படவில்லை சமஷ்டிக் கவுன்சிலில் ஏழு இலாகாக்கள் வருமாறு:- அரசியல் உள்நாட்டு விஷயம், பொருளாதாரம், நீதி நிர்வாகமும் பொலிசும் இராணுவமும் நிதியும் சட்டமும், தபாலும், ரயில்வேயும் சமஷ்டிக் கவுன்ஸிலே இவ்விலாகாக்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றன. அதில் ஒவ்வொரு மெம்பரும் மற்றோர் இலாக்காவின் டிபுடி பதில் அதிகாரி) யாகவும் பொறு

வதோ அல்லது வேறுவித கருத்தை வெளியிடுவதோ இல்லை. சட்டசபை நிறைவேற்றும் சட்டங்களுக்கான றெகுலேஷன் (விதிகளை) சமஷ்டிக் கவுன்ஸில் தயாரித்து வெளிவிடுகின்றது. நிர்வாகத் தகராறுகளில் தீர்ப்புக்கூறும் அதிகாரமும் அதற்குண்டு.

### நீதி நிர்வாகம்

ஒவ்வொரு காண்டனிலும் முதல்நியாயசபையும்இரண்டாவது நியாயசபையுமுள்ளன. அதற்குமேல் சுப்ரீம் கோர்ட் என்ற சமஷ்டி நீதிமன்றம்காண்டனிலுள்ள இரு கோர்ட்டுகளுக்கும்நீதிபதிகளை அங்குள்ள மக்களே தெரிவு செய்கின்றனர். சட்டப்பயிற்சி அற்றவர்களும் இதற்கு நியமிக்கப்படுகிறார்கள். சாட்சியங்களை அங்கு சீர்தூக்கி நியாயம் வழங்கப் பகுத்தறிவாளர்கள் அவசியமென்றும் வெறும் சட்டஞானம் மட்டும் போதாதென்றும் கருதியே இவ்விதம் நியமிக்கின்றனர். தலைமை வகிக்கும் நீதிபதிகள் சில இடங்களில் சட்டப்பயிற்சி இல்லாத சாதாரண பிரஜைகளாக இருப்பர். சட்ட ஆசிரியர்களைச் சில காண்டன்கள் அப்பீல் கோர்ட் நீதிபதிகளாக நியமிக்கப்படுகின்றனர். வெளிநாட்டவரும் இவ்விதம்நியமிக்கப்படுகின்றனர். பல காண்டன்களில் ஜூரி முறையும் இருந்து வருகின்றது.

சமஷ்டி சுப்ரீம் கோர்ட்டில் மொத்தம் 26 நீதிபதிகள். அவர்களைச் சமஷ்டி சட்டசபையே தேர்ந்தெடுக்கிறது, லாஸோன் நகரில் இந்த நீதிமன்றமுள்ளது. அதிக செலவு இல்லாமல் வழக்குகளில் உடனுக்குடன் நீதி வழங்கப்படுகின்றது.

### வெளிநாட்டுக் கொள்கை

கண்டிப்பான நடுநிலைமைக் கொள்கையையே ஸ்விட்சர்லாந்து பின்பற்றிவருகின்றது. இதைப் பெரிய வல்லரசுகளும் அங்கீகரித்து உத்தரவாதமளித்துள்ளன.

## ஜெயாரன் எழுதுவது

தகநாயக்காவைப் பற்றி "டெயிலிமிரர்" பத்திரிகையில் வெளியான கேலிச் சித்திரமொன்று என் மனதைக் கவர்ந்தது. "ஊஞ்சல் காலம்" என்ற தலைப்புடன் வெளியான அப்படத்தில் ஐந்து 'அரசியல்' மரங்கள் உள்ளன. லங்கா சமசமாஜக் கட்சி, எம். ஈ பி. சுதந்திரக்கட்சி. பாஷை பெரமுனை, யு என். பி. முதலிய ஐந்துமரங்களிலும் தகநாயக்கா தாவித் தாவி வந்து, கடைசியாக யு. என். பி. மரத்திலே தமது வாலைச் சுற்றிப் பிடித்துக்கொண்டு, அங்கிருந்து வேறு எங்கு தாவலாம் என்று ஊஞ்சலாடிக்கொண்டே பார்க்கின்றார்.

பல கட்சிகள் மாறியுள்ள 'தகா'வே இக்கேலிச்சித்திரத்தைப் பார்த்தால் சிரிப்பார். புண்படுத்தாமல் மிக நல்ல முறையில் அவரைக் கிண்டல்செய்கிறது இந்தச் சித்திரம். இக்கலையின் மேன்மை, புண்படுத்தாமல் ஓர் அரசியல் உண்மையை அறிவுறுத்துவதில்தான் அடங்கியுள்ளது இச்சித்திரம் தீட்டியுள்ள எஸ். ஸி. ஒபாதாவைப் பாராட்ட வேண்டும்.

அரசியல் கேலிச் சித்திரங்கள் வரைவது ஒருவித ஆபத்தான வேலை. முன்னர் 'காலெட்' என்ற முதல்தரமான கலைஞர் அரசியல் கேலிச்சித்திரம் எழுதியதின் பயனாக, இந்நாட்டை விட்டே வெளியேறிச்செல்ல நேரிட்டது குறிப்பிடத்தக்கது. அரசியலில் பெரிய மாறுதல் ஏற்பட்டுள்ள இலங்கையிலே, இவ்விதகலைஞர்களின் நிலை பத்திரமானதல்ல. என்றாலும் தகா'வைக் கிண்டல் செய்வது அவ்வளவு ஆபத்தல்லதான் அவர் இன்னும் எதிர்க்கட்சியில்தானே இருக்கிறார்

0 0 0

இலங்கைக்கு ஒரு பெண்கள் சேனை இருக்கவேண்டுமென்று ஐக்கிய முன்னணி அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் ஒரு பிரேரணையை மிகிந்தலை பிரதிநிதி தென்னக்கூன் கொணர்ந்திருக்கிறார்;

ஒரு பெண்மணியைப் பிரதமராகக்கொண்ட ஒருநாட்டில், பெண்கள் சைன்யமும் இருப்பது பொருத்தமானதே. அல்லி அரசாணி ஆண்டபோது, அவருக்குப் பெண்கள் படையே பெருந்துணையாக இருந்திருப்பதா

பலநாட்டு இராணுவங்களிலும் பெண்கள் பல உதவிப் படைகளில் சேர்ந்து நல்ல தொண்டு செய்துவருகின்றார்கள். சில வருடங்களுக்கு முன்பாக புதுடில்லியில் நடைபெற்ற குடிஅரசு விழா அணிவகுப்பின்போது மழை கொட்டியது குளிரும அதிகம். அந்தக் குளிரிலும் மழையிலும், பெண்கள் உதவிப்படையினர் நனைந்துகொண்டே, துப்பாக்கிகளுடன் அணிவகுத்துச் சென்ற காட்சியை என் கண்கள் இன்றும் மறக்கவில்லை

ஆனால் "அகிம்சாபரமோதர்ம" என்று கூறும் பௌத்த சமயத்தை அதிகமானவர் பின்பற்றும் இலங்கையிலே, பெண்கள்சைன்யத்துக்கு உண்மையில் வேலை ஏதும் இருக்குமா என்பது சந்தேகமே.

இங்கு ஆண்கள் படைகளுக்கே உண்மையில் வேலையில்லை. அதனால் பொலிஸ் செய்யவேண்டிய வேலைகளுக்கு இராணுவத்தினரை அனுப்பிவைக்கிறார்கள். அதனால் பலபுதிய பிரச்னைகள் கிளம்புகின்றன. அப்படி இருக்க பெண்கள் பட்டாளம் இங்கு என்ன வேலை செய்யப்போகின்றன? ஒருவேளை ஆண்கள் படைகளையே கலைத்துவிட்டு, பெண்கள் படைகளையே நியமித்துவிடுவார்களோ?

0 0 0

இப்போது வண்ணை சிவன் கோயில்: திருநெல்வேலி சிவன்கோயில் முதலிய இடங்களில் அம்மன் திருவிழாக்கள் சிறப்பாக நடந்துவருகின்றன. இன்று தேர்த்திருவிழா.

பங்குனிமாதம் நடைபெறும் திருவிழாவிலே சுவாமியுடன் அம்மனுக்கும் சரிசமமான பங்குண்டு ஆனால் இந்த அம்மன் திருவிழாவிலே சுவாமிக்கு இடமே இல்லை! பெண்மைக்கு சைவ சமயத்திலே எவ்வளவு சிறப்பான இடம் அளிக்கப்பட்டுள்ளது! 'பெண்மை வெல்க என்று ஊதுடா சங்கம்' அமரகவி பாரதியார்.

0 0 0

கூடலையாற்றூரிற்கொடியிடை அவளோடும், ஆடலுகந்தானை அதிசயம் இதுவென்று. நாடிய இன்தமிழால் நாவலவூரன் சொல், பாடல்கள் பத்தும் வல்லார் தம்வினை பற்றறுமே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படி பதிவானவர்கள், [4] சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி பதிவானவர்கள் என்று பலவகையினர் இருக்கின்றனர்.

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்பட்ட பின்னரும் அவர்கள் 'பதிவுப் பிரஜைகள்' என புதிய ஓர் இனமாக இங்கு உருவாக்கப்பட்டுள்ளனர். வர்த்தகம், கைத்தொழில்துறைகளில் மட்டுமல்லாது இதரவிஷயங்களிலும் கடந்தகாலங்களில் வம்சாவழிப் பிரஜைகளுக்கும பதிவுப்பிரஜைகளுக்குமிடையில் பாகுபாடு காட்டப்பட்டுவந்தது. இன்றைய அரசாங்கமும் கைத்தொழில் துறையில் பதிவுப்பிரஜைகளிடமுள்ள ஏகபோகத்தையும் ஒழித்துக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது சோஷலிஸ தர்மப்படி ஏகபோகமே இருக்கப்படாது. பதிவுப்பிரஜைகளிடம் மட்டுமல்லாமல், மற்ற களைச் சந்தேகப்பிரஜைகளாகக் கருதும் சட்டங்கள் இருந்தால் அவர்கள் நாட்டிலே நிம்மதியாகவும் பயமின்றியும். சரிசமமாகவும் வாழமுடியாமற்போகும்.

ஒருநாட்டில் குடியேறியவர் அந்த நாட்டுப் பிரஜையாக தம்மைப் பதிவுசெய்து கொண்டு அந்த நாட்டு பிரஜையாக மாறியபின்னர் அவர் அந்தநாட்டின் இதர பிரஜைகளுடன் ஒன்றுகிவிடுகிறார். அவருக்கும் அந்த நாட்டின் வம்சாவழிப் பிரஜைகளுக்குமிடையில் வேறுபாடு ஏன் இருக்கவேண்டும். இதுதான் உலகநாடுகளில் இருந்துவரும் நடைமுறை. இதையே இலங்கையும் பின்பற்றவேண்டியகாலம் வந்துவிட்டது.

இந்நாட்டுப் பிரஜைகளுக்குள்ளாகவே சட்டமூலமே வேறுபாடு காட்டுவதாயின் நாட்டின்ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் அது உதவமுடியாது.

'குவியல்' முறையில்அளித்து அவர் தெரிவுசெய்யப்பட உதவலாம். யாராவது 15 வாக்காளர் சேர்ந்து ஓர் இடாப்பைத் தயாரித்துதேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன் அனுப்பலாம். சட்டம் இப்படி இருப்பினும் பொதுவாகக் கட்சிகளே இந்த இடாப்புகளைத் தயாரித்துச் சமர்ப்பிக்கவிருக்கின்றன; ஒரு தேசியக் கவுன்சிலர் இறந்தாலோ அல்லது தமது பதவியை ராஜினுமாச் செய்தாலோ அவர் எந்த இடாப்பைச் சேர்ந்தவரோ அதில் அவருக்கு அடுத்தபடியான வாக்குகளைப்பெற்றவர் அந்த ஸ்தானத்துக்கு மெம்பராவார். இதனுல் இடைத்தேர்தல் நாடவேண்டிய அவசியமில்லை. மிக அபூர்வமாகவே இடைத்தேர்தல்கள் நடைபெறுகின்றன. இந்த விகிதாசாரத் தேர்தல்முறையால் பல அரசியல் கருத்துகள் கொண்ட கட்சிகளுக்கும் இடம் கிடைப்பதுடன், தேசிய கவுன்சிலும், மக்களின் பலதரப்பட்ட அபிப்பிராயங்களையும் உண்மையில் பிரதிபலிப்பதாகவிருக்கிறது.

பொதுவாகத் தனிப்பட்ட ஒரு கட்சிக்கு மேலதிகமான பலம் கிடைப்பதில்லை. பல கட்சிகளும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் நிறுவி சமரசமாக ஆட்சி நிர்வாகத்தை நடாத்தவேண்டி ஏற்பட்

கொள்ளும் உரிமையும்காண்டனுக்கு உண்டு. இதற்கான விதிகளைத் தலைமை அரசாங்கம் நிர்ணயிப்பதில்லை.

**சமஷ்டி சபை**

தலைமைச் சமஷ்டி அல்லது கான்படரேஷனுக்கு தலைவர் கிடையாது. காண்டன் சபைக்கு தேசாதிபதியில்லை. ஏழுபேரடங்கிய சமஷ்டி சபையே நிர்வாகக் குழுவாகும் காண்டன்களில் ஐவரே உள்ளனர். பெர்ன காண்டனில் ஒன்பதுபேர் இருக்கின்றனர்.

சமஷ்டி சபையைச்சேர்ந்த ஏழு பேரிடமும்தான் தேச நிர்வாகமுள்ளது ஐக்கிய சமஷ்டிசபையே சமஷ்டிக் கவுன்சிலுக்கு ஏழுபேர்களை தெரிவுசெய்யும். அவர்கள் உத்தியோக காலம் நான்கு வருடங்களாகும் ஒரு காண்டனிலிருந்து ஒரு சமஷ்டிக் கவுன்சிலுக்குமேல் தெரிவு செய்யப்படமுடியாது. இரு சபை மெம்பர்களிலும், யாரும் அதேசமயம் சமஷ்டிக் கவுன்சிலராக இருக்கக்கூடாது. மூன்று பெரியகாண்டன்களுக்கு சமஷ்டிக் கவுன்சிலில் மூன்று நிரந்தர ஸ்தானங்களுண்டு. இது சட்ட இலாகாக்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றன. அதில் ஒவ்வொரு மெம்பரும் மற்றோர் இலாக்காவின் டிபுடி பதில் அதிகாரி) யாகவும் பொறுப்பு வகிக்கின்றார். கான்படரேஷன் (தலைமைச் சமஷ்டி) தலைவரே அரசியல் (வெளிநாட்டு) இலாகா பொறுப்பு வகிக்கின்றார். இராணுவ இலாக்காவை பெரிய உத்தியோகம் வகித்த ஓர் அரசியல் வாதியான கவுன்ஸிலர் வகிக்கிறார் நீதி இலாக்காவுக்கு சட்ட நிபுணரான கவுன்சிலர் தெரிவு செய்யப்படுகிறார். பல முக்கிய விஷயங்கள் மூன்று கவுன்ஸிலர்கள் அடங்கிய கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்படும். பல இலாக்கா நிர்வாகமும் டைரக்டர்களின் பொறுப்பும் நடைபெறுகின்றன; ஸ்விஸ் நிர்வாகத்தில் டைரக்டர்களின் பொறுப்பும் நடைபெறுகின்றன. ஸ்விஸ் நிர்வாகத்தில் லஞ்சம்முதலிய ஊழல்கள் மிகவும் குறைவு. சமஷ்டிச் சபையில் பல கட்சியைச் சேர்ந்தவர்கள் இருப்பினும் அவர்கள் பகிரங்கமாக ஒருவரை ஒருவர் மறுத்துப் பேசு

கொள்கை

கண்டிப்பான நடுநிலைமைக் கொள்கையையே ஸ்விட்சர்லாந்து பின்பற்றி வருகின்றது. இதைப் பெரிய வல்லரசுகளும் அங்கீகரித்து உத்தரவாதமளித்துள்ளன. எல்லா யுத்தங்களிலும் ஸ்விட்ஸர்லாந்து சேருவதில்லை. என்றாலும் பலமானராணுவம் அங்கு உண்டு. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனிப்பட்ட முறையில் இங்கிருந்தேயுத்தகஷ்ட நிவாரண வேலைகளை செய்கின்றது. இந்த ஸ்தாபனம் மூலமே யுத்த நாடுகளுக்கிடையே முக்கிய தொடர்புகளுமிருக்கும். யுத்தகாலத்தில் நல்ல சமாதான பணிகளை இரு கட்சிகளுக்கும் செய்துள்ளது. சர்வதேச சங்கத்தில் சேருவதா இல்லையா என்பதை ஜனவாக்கு மூலம் தீர்மானித்து அச்சபையில் சேர்ந்தது. அதன் தலைமை ஸ்தானம் ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த ஜெனிவாவிலேயே வெளிநாட்டுக் கொள்கை அமைக்கப்பட்டது. நடுநிலைமையையே கடைப்பிடிப்பதால் ஸ்விஸ் நிதானமாக இருப்பதில் வியப்பில்லை சமஷ்டிக்கவுன்சிலே வெளிநாட்டுக் கொள்கையை வகுத்து வருகிறது

கல்விப்பொறுப்பு காண்டன்களிடம்தான். ஸ்விட்ஸர்லாந்தில் எழுதப்படிக்கத் தெரியாதவரே கிடையாது, 6முதல 15வரை கட்டாயக் கல்வி அளிக்கப்படுகின்றது. பள்ளிக்கூடங்களெல்லாம் அரசாங்கப் பொறுப்பு சர்ச்சின் பொறுப்பல்ல. சர்வகலாசாலையும் அரசாங்கத்தின் பொறுப்பில்தான் மொத்தம் 7 சர்வகலாசாலைகள் உள்ளன ஸ்விட்ஸர்லாந்தில் கட்டாய இராணுவ சேவையுள்ளது. எல்லாம் பாதுகாப்புக்காகத்தான். படையெடுப்பு என்பதில்லை ஒவ்வொரு சிப்பாயும் பயிற்சி முடிந்ததும் துப்பாக்கியை தன் வீட்டுக்கே கொண்டுசென்று வைத்துக் கொள்கிறார். இரு பெரிய யுத்தங்கள் நடந்தபோதும் அந்தத் தீயில்சிக்காமல் சமாதானத்துக்காக தாங்கள் உதவ முடிந்ததைப்பற்றி ஸ்விஸ் மக்கள் எல்லாரும் பெருமைப்படுவதுடன் தங்கள் அரசியல் அமைப்பே அதற்கு காரணமென்று கருதி அதைப் பலப்படுத்தி ஒத்துழைக்கின்றனர்.

## விவசாய வீரர் சம்பளம்

விஸ்வமடு, திங்கள் ஒருமாதகால கட்டாய லீவில் அனுப்பிவைக்கப்பட்ட விவசாயப்படை வீரர்களின் சம்பளப்பட்டியல் தயராகிவருகின்றன. இம்மாதம் 12-ம் திகதிக்கு முன்னராக சம்பளம் அவர்கள் கையில் கிடைக்குமெனஎதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயப்படை வீரர்களின் ஒரு மாதச் சம்பளத்தை வழங்குவதற்கான எற்பாடுகளை. செய்யுமாறு விவசாயப்படை தலமைப்பீடம் சகல விவசாயப்படைமுகாம்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில்கேட்டுக் கொண்டுள்ளது.

# ஆதரவற்றுக் கிடந்தவருக்கு ஈமக்கிரியைசெய்தவழிப்போக்கர்

உடும்பராய், திங்கள் அனுதரவாக கடுமையான சுகயீனத்தால் அவஸ்தைப்பட்டுக்கொண்டு கிடந்த ஒருவரின் பரிதாப நிலையைக் கண்டு அவரை உடனடியாகவே ஆஸ்பத்திரியில் அனுமதித்த வழிப்போக்கர் ஒருவர் அந்த நோயாளி இறந்த பின்னரும் அவரது ஈமக்கிரிகைகளை தாமே முன்னின்று நடத்தி வைத்த சம்பவம் கொக்குவில் கல்லூரி வீதியில் நடைபெற்றுள்ளது.

கடந்த 1-ந் திகதி மாலை கொக்குவில் கல்லூரி வீதியைச் சேர்ந்த ஏ. பூபாலசிங்கம் என்பவர் தமது கடமை முடிந்து காரியாலயத்திலிருந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது ஒரு நோயாளி மிகவும் அவஸ்தைப்பட்ட நிலையில் தனிமையில் கிடக்கக் காணப்பட்டதாகவும், உடனடியாக அவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும், அங்கிருந்து குறிப்பிட்ட நோயாளி காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மாலை 5-45 மணிக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கே எஸ். கனகரத்தினம் (55 வயது) நோயாளி இரவு 10 30 மணிக்கு இறந்துவிட்டதாக அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்த பூபாலசிங்கத்துக்கு காங்கேசன்துறை வைத்திய அதிகாரி சந்தி மூலம் அறிவித்தார்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்ற பூபாலசிங்கம் இறந்தவரின் சடலத்தைத் தாமே பொறுப்பெடுத்து ஈமக்கிரியைகளையும் தாமே செய்துமுடித்தார். இறந்தவர் மரணமாகவில்லை என்றும், அவரது மரணச் செய்தி கேட்டு ஒரிரு உறவினர் ஈமக்கிரிகைகளில் கலந்து கொண்டதாகவும் தெரியவருகிறது

காங்கேசன்துறை அரசாங்க மயானத்தில் ஈமக்கிரிகைகள் நடைபெற்றன. இறந்தவர் குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவிலைச் சேர்ந்தவர் என்று மரண விசாரணையின்போது தெரியவந்தது. காங்கேசன்துறை மரண விசாரணை அதிகாரி இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

கடந்த சில காலமாக தொய்வு நோயினுல் இவர் பீடிக்கப்பட்டிருந்ததாக சாட்சியமளித்த டாக்டர் தெரிவித்தார்

# "சின்னமடு" திருப்பதி

[தீவுப்பகுதியின் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றுன சின்னமடுச்செபமாலைமாதா கோவில் வருடாந்த உற்சவம் நாளை முடிவடைகின்றது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.]

இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன் சரவணையம் பதியில் ஞான தீட்சை பெற்றவர்களுக்காக வண சவிரி முத்து சந்திரசேகரா சுவாமியார் நிர்மாணித்த புதுக் கோவிலைப் பற்றி அறியாதார் தீவுப்பகுதியில் இல்லை. அவர் ஆன்ம வாஞ்சை மிக்கவரான ஓர் உத்தம குரு எனவே ஊர்காவற்றுறை மாதா கோவில் பக்கப் பீடத்தில் இருந்த மாதா சொரூபத்தை எடுத்துக்கொண்டு வந்து சின்னமடு புதுக்கோவிலில் எழுந்தேற்றம் செய்தார்.

1895ம் ஆண்டு ஆவணித் திங்கள் 5ம் நாள் முதன்முறை விழா எடுக்கப்பட்ட நாள் தொடக்கம், தூர இடங்களில் இருந்தும் அயற் கிராமங்களிலிருந்தும் மகோற்சவ நாட்களில் மாத்திரமல்ல, சிறப்பாக மாத முதற்சனிக்கிழமைகளிலும் சமய வேறுபாடின்றி மக்கள் இங்கு வந்து தரிசனம் செய்கின்றனர்.

'மனிதன் கோயிலைக்கட்டுவான், ஆனுல் யாத்திரைத் தலம் அமைப்பது இறைவனே' என்னும் முதுமொழிக்கு அமைய தேவனின் திருக்கரம் சின்னமடுவில் வியாவித்திருந்ததை உணர்ந்த மகாவந் ஹென்றி யூலன் ஆண்டவர் அப் பதியை யாத்திரைத் தலமாக உறுதிப் படுத்தினுர். அன்று தொடக்கம் வன்னிப்பகுதியில் உள்ள பெரிய மடுவுக்குச் செல்ல முடியாதவர்கள் சின்ன மடுவுக்கு பாதயாத்திரை செய்து கணக்கற்ற ஆன்ம சரீர நன்மைகளைப் பெற்று வருகிறுர்கள்.

நாரந்தனை பங்கைச் சேர்ந்த சின்னமடு சேத்திரத்தில் ஆடி இரண்டாம் திகதியும் ஆவணி ஐந்தாம் திகதியும் ஐப்பசி முதல் ஞாயிற்றுக் கிழமையும் விழா எடுக்கப்படுகிறது.

—[illegible]

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

டில், பெண்கள் சைன்யமும் இருப்பது பொருத்தமானதே. அல்லி அரசாணி ஆண்டபோது, அவருக்குப் பெண்கள் படையே பெருந்துணையாக இருந்திருப்பதாகக் கதை.

வென்று. நாடிய இன்தமிழால் நாவலவூரன் சொல், பாடல்கள் பத்தும் வல்லார் தம்வினை பற்றறுமே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# '1-ம்எதிரிக்குகைத்துப்பாக்கி வாங்கிக் கொடுத்தேன்'

## நகைவியாபாரி கொலைவழக்கில் 'கோர்ட்பியோன்' சாட்சியம்

வல்வெட்டித்துறை திங்கள் ''முதலாவது எதிரியிடமிருந்த பவுண் துண்டு ஒன்றை ரூபா 400க்கு விற்றுக்கொடுத்தேன், அதில் ரூபா 100 கடனுகவும் பெற்றேன்'' என புலோலி மேற்கைச் சேர்ந்தவேலுப்பிள்ளை கதிராமலிங்கம் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு.கே, விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

இவ்வழக்கு அல்வாய்தெற்கைச் சேர்ந்த ச இராமச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்தசெ. நடராசா ஆகிய இருவரும் 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ந் திகதி பருத்தித்துறை நகைவியாபாரி எம் எம், சுல்தான் மொஹிடீன் என்பவரை சதிசெய்து கொலைசெய்ததாக கொழும்புஇரகசியப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது.

கதிராமலிங்கம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

68-ம் ஆண்டு நவம்பர் மாதம் நான் அக்கரைப்பற்று கிராமக்கோர்ட்டில் பியோனுக கடமையாற்றி வந்தேன் வேலைசெய்த காலத்தில் அக்கரைப்பற்றில் தான் இருந்தேன் அந்தக் காலத்தில் ஒரு நாள் 1-ம் எதிரியும், இவ்வழக்கில் சாட்சியமளித்த திருஞான சம்பந்தமூர்த்தி என்பவரும் என்னிடம் வந்தனர். அப்பொழுது எனக்கு 1-ம் எதிரியைத் தெரியாது. அன்று நான் 1-ம் எதிரி திருஞானம் மற்றும் இருவருமாக ஐந்துபேர் சாரயம் குடித்தோம் என்னிடம் வந்தவர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து பொத்துவிலில் சைக்கிளைவிட்டுவிட்டு என்னிடத்திற்கு பஸ் மூலம் வந்ததாகச் சொன்னுர்கள் இரண்டாம் நாள் 1-ம்எதிரியுடன் வந்ததிருஞானத்திடம் ரூபா 100 கடன் கேட்டேன். அவர் இல்லையென்று சொன்னுர் பிறகு 1-ம் எதிரி தனது உள் அங்கியிலிருந்து ஒரு பவுண் துண்டை எடுத்து திருஞானத்திடம் விற்கும்படி கொடுத்தார் திருஞானம் அத்துண்டை என்னிடம் தந்தார். அதை நான் ரூபா 400க்கு விற்றுக்கொடுத்தேன் அப்பணத்தில் தான் திருஞானம் 1-ம் எதிரியிடமிருந்து ரூபா 100 எனக்கு கடனுக வாங்கித்தந்தார். அவ்விடம் 1-ம் எதிரிக்கு ஒரு கைத்துப்பாக்கி வாங்கிக் கொடுத்தேன்.

நகை வியாபாரியின் கொலைப்பற்றிப் பத்திரிகையில் பார்த்தேன், இரகசியப் பொலிசாருக்கு வாக்கு மூலம் அளித்தேன். அவர்களுக்கு வாக்குமூலம் கொடுப்பதற்குகிட்டத்தட்ட மூன்று மாதத்திற்கு முன்னர் பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு இதுபற்றிச் சொன்னேன்'.

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

........

கோட்டை, திங்கள் ''இலங்கையிலுள்ள இஸ்ரேல் பதில் தூதுவர் 24 மணித்தியாலத்துக்குள் தூதரகத்தை மூடி நாட்டை விட்டு வெளியேறவேண்டும்.

ஆட்சிமன்ற அரசாங்க குழு, மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைபவத்தில் பேசுகையில் படிப்படியாக நாடு முழுவதுமுள்ள நீதிமன்றங்கள் சிங்களத்திலேயே இயங்குமெனத் தெரிவித்தார்.

பரீட்சார்த்தமாககம்பஹா நீதிமன்றங்களில் சிங்கள விசாரணை நடைபெறுமென்றும் அதன்பின் மற்றும் நீதிமன்றங்களிலும்சிங்களத்தில் விசாரணை ஆரம்பிக்கப்படுமென்றும் நீதிமந்திரி கூறினுர்.

சிங்கள விசாரணை ஆரம்பமாவதற்குமுன் பௌத்த பிக்குகள் பிரித் ஓதினுர்கள்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org